ஞான சம்பந்தம்

29

நவம்பர், டிசம்பர், 1953

7L
7211, N25TP
N53.29.8-9
209455

300
54
670

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத்
தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

விசய,
கார்த்திகை மார்கழி
துணர் ௨௯ — மலர் ௮, ௯

பொழிற்றொண்டர்,
இராவுசாகேப்,
S. சயம்பிரகாசம், B. A., B. L., M. L. A.

உள்ளுறை.

துணர் உகூ]   விசய கார்த்திகை, மார்கழி   [மலர்
1953, நவம்பர், டிசம்பர்.

1. கரந்தைக் கவியரசு மறைவு
பொழிற்றொண்டர்
2. கரந்தைக் கவியரசு மறை—
பேராசிரியர் சித்தாந்தகலாநிதி
ஒளவை, சு. துரைசாமி பிள்ளையவர்கள், மதுரை, 9
3. செந்தமிழ்க் காவலர்
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.
தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 15
4. கரந்தைக் கவியரசு
திரு. K சோமசுந்தரம் பிள்ளை, B. A. B., L. தஞ்சை. 1
5. எச்சம
வித்துவான் ஆ சிவலிங்கனார், விரிவுரையாளர்,
சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.
6. புகழ் வாழ்க தமிழேபோல்
வித்துவான் சி. அரசப்பன்,
ஸர் சி. உயர்நிலைப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி,
7. தமிழின் பெருமை விளக்குவதெப்போது
கோவை கிழார் 2
8. துன்பப் பதிகம்
வித்துவான்: ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.] 31
9. என் மனம் கவர் கவிஞர்
T. A. R. சுப்புலட்சுமி, I. U. C.,
Holycross College, Trichy. 37
10 கவியரசரின் நகைச் சுவை
சி. நடராசன், IV U. C கரந்தைப் புலவர் கல்லூரி.
11. கவியரசும் கடமையும்
வித்துவான், ந. இராமநாதன்
துணைத்தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி. 53
12. புலவரை இழந்த தலைவரின் துயரம்
சங்கத் தலைவர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார்
13. மண உலகம்
வித்துவான் திரு. ச. பாலசுந்தரம். விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

குறிப்பு:—தமிழ்ப்பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ம் ந
குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்
அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்றொகையையும்
கொள்ளவேண்டும்

Edited and Published by
Rao Sahib S. Swayamprakasam B.A., B.L., M.L.A. Karanth
Sangam Tanjore. Printed by M. Ratnasami Malavaraya
Co-operative Press, Tanjore Limited.

669

தோற்றம்: விப, மார்கழி 5.   மறைவு: விசய கார்த்திகை 21

தஞ்சை, கரந்தைக் கவியரசு,

திரு. அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

தேனூர் தமிழ்அளித்த தெய்வத்தொல் காப்பியச்சொற்
கானூ உரைவகுத்த ஆன்றபுகழ்ச்—சேனூ
வரையனுரை வார்த்துரைத்த வள்ளால்! நீ சென்றாய்
திருவுறையும் நம்பனடி சேர்ந்து.

அவ்வேங்க டாசலமும் ஆர்வேங்க டாசலமும்
செவ்வே புகழுயாத் தொத்தாலும்—வெவ்வேறே
மால்தாங்கும் அம்மலையோ, மால்நீக்கும் செந்தமிழாம்
நூல்தாங்கும் இம்மலையோ நோற்று.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௯	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௪ விசய—கார்த்திகை. மார்கழி 1953—நவம்பர், டிசம்பர்	மலர் ௮, ௯

கரந்தைக் கவியரசு மறைவு.

கரந்தைக் கவியரசு திரு. அரங்க. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், கண்டர்கோட்டைக்கு அண்மையிலுள்ள மோகனூரில் விய-ஆண்டு மார்கழித் திங்கள் 5-ஆம் நாள் பிறந்தவர். சங்ககாலத்தில் முல்லைநில மக்கள் என்று சிறப்பித்துப் புலவர்கள் பாடுதற்கமைந்த புகழமைந்த மரபில் தோன்றியவர். இளமைக் காலத்தில் கரந்தையில் அமைந்திருந்த தூயபேதுரு கல்வி நிலையத்தில் கல்வி பயின்றவர். அவர்களோடு அக்காலத்தில் கல்வி பயின்றவர்கள் சங்கம் நிறுவிய துங்கரான, திரு. இராதாகிருட்டின பிள்ளையவர்கள், திரு. தட்சணாமூர்த்தி பிள்ளையவர்கள் ஆவர். அக்காலத்தில் கரந்தையில் தமிழ்ப் புலமை வாய்ந்து விளங்கிய திரு. வேங்கடராம பிள்ளை என்பவரிடம் தமிழ் பயின்றார். இவ்வாறு கல்வி நலம் துய்த்த கவியரசரின் கல்விக்கு ஓர் இடையூறு வாய்த்தது. அவருடைய அருமைத் தந்தையார் காலஞ் சென்றார். இதனால் தம்முடைய ஊருக்குச் சென்று குடும்பத்தைப் புரக்கும் பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது.

தங்கள் குடும்பத்தவர் பார்த்துவந்த உழவுத் தொழிலைப் பார்த்து வந்ததோடு, அந்த ஊரின் கணக்கப்பிள்ளையாகவும், மணியக்காரராகவும் இருந்து தொண்டாற்றியுள்ளார். தொழிலும், உறைவிடமும் மோகனூரில் அமைந்தாலும், கரந்தையையும், இங்குள்ள பள்ளி நண்பர்களையும் அவர் மறந்துவிடவில்லை. ஆகவே அடிக்கடி இங்கு வருவதும் நண்பர்களோடு அளவளாவுவதும் இவருடைய பழக்கமாக இருந்தது. இவ்வாறு நண்பர்களுடன் அடிக்கடி பழகும் வாய்ப்பைப் பெற்றதின் பயன்தான் கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும்.

20945

தூயபேதுரு கல்லூரியில் தமிழ்ப் புலமை நடாத்திய குயிலையா என்றழைக்கப்படும், சுப்பிரமணிய ஐயரிடம் தமிழ்ப் பயின்றார். அவர்மீது "ஆ[illegible]ற்றுப்படை" என்னும் நூலையும் இயற்றினார். இவர் தன்னுடைய ஊரில் இருக்கும் போதே கண்டர் கோட்டையில் (Sub Inspector of Police) காவல் துணைமேற்பார்வையாளராக இருந்த இலக்கணம் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை யவர்களின் தொடர்பு ஏற்பட்டது. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள் தமிழிலக்கிய இலக்கணங்களில் மிகவும் கூர்மையான அறிவு படைத்தவர். அவருடைய தொடர்பு கவியரசின் புலமை வளருவதற்கு ஏதுவாயிற்று. கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்கு முதலாக உள்ளவர்களுள் தானும் ஒருவராக இருந்ததோடு, சங்க அமைச்சராகவும், பொழில் ஆசிரியராகவும் இருந்து ஆற்றிய தொண்டுகள் அளவிறந்தன.

கோனாப்பட்டெனை வழங்கும் 'கோனார்பற்று' என்னும் ஊரில் அமைந்த கல்வி நிலையத்தில் ஆசிரியராக இருந்து சில ஆண்டுகள் பணியாற்றினார். காலஞ்சென்ற பண்டிதமணி, கதிரேசன் செட்டியாரவர்கள் நட்பு கவியரசுக்கு ஏற்படுவதாயிற்று. அக்காலையில் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் தொடர்பும் ஏற்பட்டது. டாக்டர், உ. வே. சாமிநாதையர். மகா வித்துவான் ரா. இராகவய்யங்கார், அரசஞ் சண்முகனார், மு. இராகவைய்யங்கார், அனந்தராம அய்யர், போன்ற பெரும் புலமையாளர்களின் நட்பும் பழக்கமும் ஏற்பட்டது. நேருக்கு நேர் பழகினாலன்றி புலமையையும், பெருமையையும் அறிந்துகொள்ள முடியாத காலமாக அக்கால மிருந்தது. ஆகவே, இயல்பில் நுண்மாண் நுழை புலம் படைத்த கவியரசின் புகழ் மேலும் பல இடங்களுக்கும், பல பெருமக்களுக்கும் எட்டுவதாயிற்று.

சங்கச் சார்பில் கல்வி நிலையந் தொடங்கியபோது இங்கு வந்து ஆசிரியப்பணி புரிவாராயினர். நாவலர், பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின் நெருங்கிய தொடர்பும் இவருக்கு ஏற்பட்டது. சில ஆண்டுகள் சென்ற பிறகு, தூயபேதுரு உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப்பணி புரிந்தார். தெய்வச்சிலையார் உரை பதிப்பிக்கும் பொறுப்பை மேற்கொண்டு அதற்கானவற்றைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். சங்க வெளியீடாக அந் நூல் வெளிவந்தது. அந் நூலின் முன்னுரையில் கவியரசர் வரைந்துள்ள கருத்துக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தன. இவ்வாறு சங்கத் தொண்டுடன் தூயபேதுரு உயர்நிலைப்பள்ளியிலும் பத்து ஆண்டுகள்

தொடர்ந்து பணியாற்றினார். இது போழ்து, தமிழ்ப் பொழிலில், இவர் "நாய் பிடிக்கும் சோமன்" என்பதுபோன்ற மாணவர்கட்குப் பயன்படும்படியான சிறந்த கருத்துக்களடங்கிய நகைச்சுவைக் கட்டுரைகளை வரைந்துள்ளார்.

1932-ல் திருவையாறு அரசர் கல்லூரிக்குத் தமிழ்ப்பணி புரியச் சென்றார். அங்குதான் இவருடைய சிறந்த தமிழ்ப்புலமை நன்கு பயன்பட்டது. தமிழ் நாட்டில் இன்று பெரிய கல்வி நிலையங்களிலாயினும், உயர்நிலைப்பள்ளிகளிலாயினும் தமிழ் அறிவுறுத்தும் ஆசிரியர்களுள் பலர் இவரிடம் பயின்றவர்களாவர். இது போலப் பல மாணவர்க்குப் பாடஞ் சொல்லும் வாய்ப்பு, தமிழ் நாட்டில் பல பெரும்புலவர்கட்கு வாய்க்கவில்லை. இதனால் இவருடைய புகழ் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிற்று. சங்கச் சார்பில் ஆண்டுதோறும் நிகழ்ந்த ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கும் பெருமக்கட்கெல்லாம் பாமாலை புனையும் பணி கவியரசருக்கு வாய்த்தது. அப்பாட்டுக்களெல்லாம் இவர் இயற்றியவையாகும். இப்பாடல்களெல்லாம் இவருடைய பாவியற்றும் வன்மையை விளக்கின சங்க வெள்ளி விழாவின்போது இவருக்குக் கரந்தைக் கவியரசென்று பட்டமளித்துச் சங்கத்தார் சிறப்பித்தனர்.

அரசர் கல்லூரியிலிருந்தபோது, தஞ்சைக்கு வாரந்தோறும் வந்து ஓய்வுபெற்றுத் தங்கியிருந்த நாட்டாரவர்களுடன் கூடி அகநானூறு என்னும் சங்க நூலுக்கு உரைகாணும் பெருமுயற்சியில் ஈடுபட்டார். இவ்வாறு மாணவர்கட்குப் பாடங் கூறியும், உரை வகுத்தும் தமிழன்னைக்குத் தொண்டு புரிந்த கவியரசர், 1942-ஆம் ஆண்டில் திருவையாற்று அரசர் கல்லூரியினின்றும் ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்றவுடன் கரந்தையில் தங்கிச் சங்கச் சார்பில் நிகழும் புலவர் கல்லூரியில் தொண்டு புரிவாராயினர். நாட்டாரவர்கள் தலைவராகவும், கவியரசர் துணைத் தலைவராகவும் இருந்து தமிழ்ப்பணி புரிந்தனர். பின்னர்த் தலைவராகவும் இருந்து கல்லூரி பேரும், புகழும் அடைய ஆட்சி செய்தனர். அப்பொழுது இவரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்று நண்பர்கள் பலர் முயன்றனர். அதுபோழ்து, சங்கத்தலைவர் திரு. ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்களும், சங்க, அமைச்சர் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளையவர்களும், திரு. அ. கணபதிபிள்ளை யவர்களும், திரு. அ. பொன்னணுகளத்தில்வென்றார் அவர்களும், திரு, தட்சணாமூர்த்தி

பிள்ளை யவர்களும், ஏனைய பிற அன்பர்களும் முயன்று விழாவைச் சிறப்பித்தனர். அவ் விழாவில் கவியரசருக்கு ஆறாயிரம் வெண் பொற்காசுகள் பல அன்பர்களிடமிருந்து திரட்டி வழங்கினர். மீண்டும் கவியரசரவர்கள் கல்லூரியில் தொடர்ந்து பணியாற்றிவரலானார். சிலப்பதிகார நாடகம் என்னும் ஒரு நூலும், இவரால் இயற்றப்பட்டு வெளிவந்தது. இவ்வாறு பல வழியிலும் தமிழுக்குத் தொண்டு செய்த கவியரசரவர்கள் விசய ஆண்டு, கார்த்திகைத் திங்கள் 21-ஆம் நாள் (16—12—53) ஞாயிற்றுக் கிழமை இறைவன் திருவடி நீழலடைந்தார்.

மாணவர்களின் இயல்பறிந்து அவர்கள் மனங்கொள்ளுமாறு பாடங் கூறுவதில் மிகவும் வல்லவர். இன்சொல்லும், எளியவாழ்வும், நகைச்சுவையும், அறிவு நிரம்பிய உரையாடலும் இவருக்கியல்பாகவே அமைந்தன. இந்த பண்புகள் எத்தகையாரையும் இவரிடம் பற்றுக்கொள்ளவும் மதிக்கவும் செய்தன. நல்ல கவியுளங் கொண்டவர். இன்னோரன்ன பண்பாடுகள் பலவற்றிற்கு நிலைக்களமாக விளங்கினார். அவர் மறைந்தார். ஆனால், அவர் புகழும் பண்பும் நம்மனோருக்கு எக்காலமும் நின்று வழி காட்டுமாக.

வாழ்க கவியரசின் புகழ். வெல்க அவர் தொண்டு.

விசயவாண்டு மார்கழிநாள் ஐந்தினிலே வெற்றி
நயனார் கவியரசர் நண்ணிப்—பயன்விளைத்துத்
தேர்விசய கார்த்திகையில் சேருபதத் தோன்றும்நாள்
சீர்விளங்கச் சென்றார் சிறந்து.

வித்துவான் சி. கோவிந்தராசன், தமிழ் விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

கல்விநெறி தனியாசான் கல்லூரிப் பெரும்புலவன் கணக்கில் லாண்டு
நல்லெழிலார் பொழிற்றொண்டன் நயமிகுகட் டுரையாளன் நாவல் லாளன்
எல்லையிலா தமிழ்ச்செல்வன் கவியரசை தமிழ்த்தாயும் இழந்தாளந்தோ !
பல்வளனார் வேங்கடா சலச்செல்வன் தமிழ்த்தொண்டைப்பகரொன்
[றேதே !

கண்டின்மிக வினிக்கின்ற நகைச்சுவைகள் பலதருவான் கருத்து மிக்க
எண்டொகையுள் அகத்துக்கோர் இயலுரையும் நாட்டாரோ டியற்றித்
[தந்தான்

பண்டுளவாம் நடைமிகவே யாசாற்றுப் படையும் பாங்காய்ச் செய்தான்
தண்டமிழ்த்தே னார்வேங்க டாசலமென் றோதுபுகழ்த் தகைமை
[யோனே !

T. K. பழநியப்பன், I. A. S.
மாவட்டத் தண்டல் நாயகம், தஞ்சாவூர்.

அன்புடையீர்,

கவியரசரின் மறைவு கவியுலகிற்கும், தமிழ் உலகிற்கும் ஆசிரிய உலகிற்கும் ஈடு செய்யமுடியாத இழப்பாகும். கரந்தைக் கவியரசரின் உறவினர், நண்பர் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபம். சமீபத்தில் ஒருவர் பின் ஒருவராக பண்டிதமணி. கதிரேசன் செட்டியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் கரந்தைக் கவியரசு. வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர், நம்மை விட்டுப் பிரிந்தது நம் தவக்குறைவே யாகும். சங்க காலப் புலவர்களின் செவ்விய புலமையும் இக்காலத் தமிழ் மக்களின் எழுச்சியும் ஒருங்கே அமையப் பெற்றுக் கவியரசர் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார். கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிய காலமுதல் அதற்கு உறுதுணையாக இருந்து பல அரிய நூல்களை இயற்றியும் வெளியிட்டும் தமிழ்ப்பணி புரிந்த தொண்டர்களில் கரந்தைக் கவியரசர் ஒருவர் அன்னார் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்க இறைஞ்சுகின்றேன்.

குன்றக்குடி அடிகளார்,

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி,

இராமநாதபுர மாவட்டம்.

தமிழ்ப் பெரியார்கள் ஒவ்வொருவராக இறைவன் திருவடியடைவது பெரிதும் வருந்தற்குரியதாகும்.

பழந்தமிழ்ச் சங்கப் புலவர்களை நாம் நினைப்பதற்குக் காரணர்களாகத் தற்காலத்தில் வாழ்ந்தவர்களுள் கரந்தைக் கவியரசு, அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் ஆவார்கள். அவரது பிரிவு தமிழார்வமுடையவர்களுக்கு ஓர் எச்சரிக்கை. அவரால் செயலாற்றப்பெற்ற சேவையை மீண்டும் பொறுப்பேற்று நடத்த இளைஞர்கள் முன்னுக்கு வரவேண்டும். கவி அரசு வேங்கடாசலம் பிள்ளை ஆக்கிய நூல்கள் பயில்வோர் மனத்தில் இத்தகைய எழுச்சியை ஊட்ட வல்லன. அன்னாருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறும் நினைவுச் சின்னமும் அவர் நூற்களில் தோய்ந்து அதன்படி நடத்தலேயாம். கவியரசர் வேங்கடாசலம் பிள்ளை இறவாத புகழுடன் நூல் வடிவில் காட்சி தருகின்றார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தவர் இதற்கு இளைஞர்களைத் தூண்டுவார்களாக.

வாழ்க! கவியரசர் வேங்கடாசலம் பிள்ளை அவர்களின் புலமையும் புகழும்.

கரந்தைக் கவியரசு மறைவு.

பேராசிரியர் சித்தாந்தகலாநிதி
ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள், மதுரை.

கரந்தைக் கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் மறைந்த செய்தி தமிழகத்துக்கு இவ்வாண்டில் உண்டான இழப்புக்களில் ஒன்று. இனிய தமிழ்க்கவி செய்யவல்ல இனிய புலவரைத் தமிழன்னை இழந்து வருந்துகிறாள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, பணி, பெருமை முதலிய கூறுகள் எல்லாவற்றிலும் நேரடியாகத் தொடர்பு கொண்ட ஒருவரைச் சங்கத்தின் தந்தையாய்த் தாயாய்ப் பணிபுரிந்த தக்கோரைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் இழந்து விட்டது. யாங்கள் எங்கள் ஆசிரியரை இழந்தோம்.

கண்டர்கோட்டை எனப்படும் கந்தருவக்கோட்டைக்கு அண்மையில் உள்ள மோகனூர் கவியரசு தோன்றிய நல்ல ஊர். தமிழ்ப் புலமை நலம் சிறந்த பழங்குடி அவரது உயர்ந்தகுடி. தமிழ்க் கல்வி சிறந்ததும் தஞ்சைக்குப் போந்து தமிழாசிரியராக இருந்து அரும்பணியால் அயராத, தமிழ்த் தொண்டால் கவியரசராக மேன்மையுற்றவர் ஆசிரியர் வேங்கடாசலம் பிள்ளை யவர்கள். அவரது தமிழ் வாழ்வு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு இணைந்து விளங்குவது. சங்கத்தின் வாழ்வும் அவரது வாழ்வும் ஒன்றுபட்டவையாகும்.

தஞ்சைத் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்க, கவியரசர் R. வேங்கடாசலம் பிள்ளை யவர்கள் அமைச்சராய்ச் செயலாற்றக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் சிறந்த தமிழ்ப்பணி புரிந்து நாடெங்கும் நல்ல புகழ்பெற்று மேம்பட்டது; அதன் வெள்ளி விழா விளக்கத்தால் வீறு பெற்றது. அதன் பின்னர்ச் சங்கத்திற்குப் பொருள் சிறிது சேர்ந்தது; கடமைகள் பெருகின: தமிழவேள் மறைந்தார்; பொருள்வளம் சுருங்கிற்று; செயலொளி குறைந்தது. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்றபடி இன்று பொருளளவு சிறுமையுற்றுப் பெரும்பணி ஆற்றிவருகிறது.

இதற்கிடையே, கவியரசர் தமது அமைச்சுக் கடமையைத் தக்க இளைஞர்பால் இருத்தித் திருவையாற்று அரசினர் கல்லூரியில் தமிழ்ப்

பேராசிரியர் பணி மேற்கொண்டு திருவையாறு சென்று சேர்ந்தார். பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராய் இருந்ததன் விளைவாக மிகப் பல சிறந்த தமிழ்ப்புலவர்கள் நாட்டில் தோன்றுவாராயினர். பின்னர் அவர்கள் கரந்தைக்கே வந்து கரந்தைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் புலவர் கல்லூரியிற் பேராசிரியராய் இருந்து முதுமையும் தளர்ச்சியும் எய்தித் தமிழ்த்தாயின் தண்ணரிய திருவடி நீழலை யடைந்தார்கள்.

கவியரசர் கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சராய் இருந்தபோது, **தமிழ்ப் பொழில்** என்னும் திங்கள் வெளியீடு தோன்றிற்று; அதன் இரண்டாமாண்டில் எனக்குத் தமிழ்ச் சங்கத் தொடர்புண்டாயிற்று. சங்கக் கல்வி நிலையத்தில் ஆசிரியர் பணியும், நூல் நிலையப் பணியும் புரியும் பேறு எனக்குக் கிடைத்தது. அக்காலைக் கவியரசர் எனக்குத் தமிழ் கற்பிக்கும் பேருதவியைச் செய்யலுற்றார்கள். தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குத் தெய்வச்சிலையார் எழுதிய உரையை வெளியிடும்பணி வந்தது; ஏடு படித்தலும் பெயர்த்தெழுதுதலும் என் பணியாயின. இடையிடை எழும் ஐயங்களை அகற்று முகத்தால் ஒரே காலத்தில் இளம்பூரணர், சேனாவரையர் நச்சினார்க்கினியார் என்ற உரையாசிரியர்களின் உரை நலங்களை எனக்குக் கற்பித்து இன்புறுத்துவது கவியரசரின் கல்விப் பணியாய் இயங்கிற்று. உரை நலங்களைப் படித்து முடித்தேன்; நூலும் வெளியாயிற்று; யானும் வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழ்ப்பணி புரியும் செயல் மேற்கொண்டு சென்றேன்.

எனக்கு இலக்கணம் கற்பிக்கும் பணி தெய்வச்சிலையார் உரை வெளியீடாய் நிலவினமையின், அக்காலைச் சங்கத்தின் நெருங்கிய தொடர்புற்றிருந்த பேராசிரியர்களான ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், எல். உலகநாத பிள்ளை முதலியோர்களின் தொடர்பு எனக்கு எய்துவதாயிற்று. அவரது தொடர்பு அன்பு செய்வதோடு நில்லாது தமிழறிவு நல்கும் ஆசிரியர்களாக இருந்து எனக்கு ஐயமகற்றி அவரது நன்றி மறவா மாணவனாய் நிலவுமாறு செய்தது. அப்போது அவர்கள் பால் என்னைப்பற்றி அன்புரை வழங்கி ஆதரவு செய்த கவியரசரின் கல்வி நலத்தை இன்று நினைப்பினும் என்னெஞ்சு கரைந்துருகுகிறது.

ஒருகால் திருக்காட்டுப்பள்ளிக்கு டாக்டர் உ. வே. சாமிநாதையர் வந்திருந்தபோது ஒருவர் தேட்கடியால் வருந்தி மருந்துண்டு தேறினார்.

அப்போது நாட்டார் கவியரசர், தண்டாயுதபாணிக் காடவராயர் தமிழவேள் அனைவரும் சூழ இருக்க, "கடித்த இடம்தான் கடுக்கிறது" என்று காடவராயர் சொன்னார். கடியும் கடுக்கிறதும் ஒன்றுதானே என்று நாட்டார் அவர்கள் கூற எல்லோரும் நகைத்தனர். அது எப்படி எனத் தமிழவேள் ஐயரவர்களைக் கேட்க, அவர்கள் என்னை விடை கூறப் பணித்தார்கள். யான் கடி என்னும் உரிச்சொல் கடுக்கிறது எனத் திரிந்து வினையாயிற்று; "கடுத்தது காட்டும் முகம்" என்றாற் போல என்றேன். அப்போது ஐயரவர்கள் எனக்கு இலக்கணம் கற்பித்த கவியரசரைப் பாராட்டியது இப்போது என் நினைவுக்கு வருகிறது. அவரது பிரிவு என் அறிவைப் பேதுறுவிக்கின்றது.

தெய்வச்சிலையார் உரை எழுதிய ஏட்டைத் திரு. ஐயரவர்கள் பால் பெற்றுவந்த போது, அவர்கள், கவியரசர் புலமையைப் பாராட்டி, தாம் சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டபோது "பெயர் விழையான்" என்ற புனைபெயரால் சில திருத்தங்களை மிக்க நுட்பமாக ஆய்ந்துரைத்தாரெனவும் பின்பே அவர்கள் கவியரசரைத் தெரிந்து கொண்டார்களெனவும் கூறியது என் நினைவில் எழுகின்றது.

தமிழவேள் மகன் பஞ்சாபகேசன் மறைந்தபோது கவியரசர், தமிழவேள் மன நிலையையும் தமிழன்பையும் வியந்து. "மன் மக்கள் எல்லாம் தன் மக்களெனக் கொள்வானை, என்னை யினிச் செய்வது இடர்" என்று பாடியது கேட்டுப் பண்டிதமணி யவர்களும் நாட்டார் அவர்களும் பாராட்டி யுரைத்ததும், தமிழவேள் அவர்களின் கலங்கிய வுள்ளம் தெளிந்ததும் இன்று நிகழ்வன போல் நெஞ்சில் தோன்றுகின்றன. இதை நினைவில் கொண்டிருந்த பண்டிதமணியவர்கள், திரு. வேங்கடாசலம் பிள்ளை யவர்கட்குக் **கவியரசர்** என்ற பட்டம் தந்தபோது பாராட்டியதும் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் முறுவலித்து மகிழ்ந்ததும் இன்று நினைக்கினும் இன்பம் தருகின்றன.

என் இனிய ஆசிரியர் அவர்களின் நலங்கள் பல நினைவுக்கு வருகின்றன. எதனை நினைப்பேன்; எதனை எழுதுவேன். இவ்வாண்டு என் மனத்துக்கு அமைதி நிலவாத வகையில் பல இழப்புக்களை நல்கிவிட்டது. பொது நோக்கால் புகழ் பெருகிய திரு. வி. க. மறைந்தார்; அன்பால் நட்பால் அறிவு நல்கிய பண்டிதமணி மறைந்தார்; ஆர்வத்தால் அருளால்

சித்தாந்த நுண்பொருள் காட்டிய தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாதப் பிள்ளை மறைந்தார்; இறுதியாக எனக்குப் பழந் தமிழ்ச் செல்வம் நல்கிய கவியரசர் மறைந்தார். இக் கொடுங் காலம் இப் பெரு மக்களை மறைக்கலாம்; வேறே என்ன செய்யமுடியும்? அவர் தம் புகழ் பொன்றுது நிற்பது. வாழ்க அவர் புகழ், வளர்க தமிழ்.

★ யாழ் நூல். ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினுன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது தோற்றம் பொலிந்தது
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

செந்தமிழ்க் காவலர்.

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.,
(தமிழ்ப் பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.)

"கரந்தைக் கவியரசர்" வேங்கடாசலம் பிள்ளை அவர்களைச் செந்தமிழ்க் காவலர் எனக் கூறுவது மிகவும் பொருந்தும் என்று கருதுகிறேன். அதற்கு அவர்கள் எழுதி வெளியிட்ட "செந்தமிழ்க் கட்டுரைகள்" என்னும் நூல் சான்று பகரும். அந்நூலின் நான்காவது கட்டுரையாக அமைந்த "தமிழிற் பிறமொழிக் கலப்பு" என்பதில், நல்ல தமிழ்ச் சொற்கள் இருப்பவும் பிறமொழிகளினின்று வரம்பின்றிச் சொற்களைக் கொண்டுவந்து புகுத்துவது நீம்பாலில் நச்சுநீர்க் கலத்தல் போன்றது எனத் தெளிவுபட எடுத்துரைத்துள்ளார். வரம்பில்லாமல், வேற்றுமொழிச் சொற்களை நிரம்ப நிரம்பச் சோம்பேறித்தனமாக நாம் கடன் வாங்கிவிட்டால், தமிழ்மொழி கலப்புமொழி எனச் சொல்லப்படும் ஓர் அல்லல்நிலை வந்தெய்தும் என்பது அவர் கருத்து. அதனால், "நம் பல்வகைத் திருவும் தாய்மொழியே என்றிருக்கும் தமிழ் மக்களாம் நாம், இம்மொழித் திருவினையும் இழந்து என்செய்வோம்?" எனக் கேட்டுள்ளார்.

பிறமொழிக் கலப்பாகிய வெள்ளத்தைத் தடுக்க வழிகள் இன்ன எனவும் விளம்பியுள்ளார். உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும் தாம் தாம் பேசுங்காலும் எழுதுங்காலும் தமிழ்ச் சொற்களையே எடுத்தாளுதல் கடமை என்று உறுதி கொள்ளல் வேண்டும் என்றூர். இவ்வாறு தமது வாழ்க்கையில் நடந்தும் காட்டினர். இவர்போல மறைமலையடிகளும் புலவர் தேவநேயப் பாவாணரும் குறிக்கொண்டமை பலர் அறிவர். 1911-ஆம்ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் தலையாய பணிகளில் ஒன்று தூய தமிழிற் பேசுவித்தலும் எழுதுவித்தலும் என்பது. அச்சங்கத்தின

ரால் நாடுமுழுதும் நல்லதமிழ்ச் சொற்கள்பரப்பப்பட்டுள்ளன அக்கிராசனர் என்ற சொல் போய்த் தலைவர் என்பது பெருவரவிற்றாயிற்று; "பிரேரேபிக்கிறேன்" போய், "முன்மொழிகிறேன்" வந்தது; "ஆதரிக்கிறேன்" போய் "வழிமொழிகிறேன்" வந்தது "தீர்மானம்" என்பது போய் "முடிவு" வந்தது. பிரசங்கத்திற்கு எதிராகச் சொற்பொழிவும், வாதத்திற்குப் பதிலாகச் சொற்போரும் எழுந்தன. "தமிழவேள்" உமாமகேசுவரனார் இவற்றைப் பரப்புதற்குப் பாடுபட்டார். தமிழறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் இவ்வழியிற் செய்த தொண்டு பெரிது. சங்கத்தின் செயலாளர் நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் தந்த விருந்துகளில் தமிழ் மணம் கமழ்ந்ததோடன்றி, விருந்து பற்றிய ஏடுகளிலும் தமிழ் மணமே கமழ்ந்தது. அவ்வேடுகளில் "பாயசம்" என்பது "பாற்குழம்பு" எனப் பொறிக்கப்பட்டிருக்கும், "ரசம்" என்பது "மிளகுநீர்" எனப் பொறிக்கப்பட்டிருக்கும், "த்தியன்னம்" என்பது "தயிர்ச்சோறு" எனப் பொறிக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு எல்லாம் நிகழ்ச்சிகள் நிகழ்தற்கு ஊக்கிவந்த கவியரசர் மறைந்துவிட்ட இக்காலில் இவற்றை நினையாமல் இருக்கமுடியவில்லை.

மொழி மக்களுடைய கருத்தைப் புலப்படுத்தற்கு உரிய கருவி என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அதனால், மக்கள் தம் மனம் போனவாறே பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் போகலாம் என்பது கருத்தன்று. நம்மொழிக்கு உரிய தக்க சொல் இருப்பவும் பிற சொற்களை வழங்குகிறோம் எனில், அதற்குக் காரணங்கள் இரண்டு உண்டு. முதலாவதாக, சோம்பரால் அங்ஙனம் செய்கிறோம்; பிறமொழியிற் கேட்ட சொற்களை அப்படியே சொல்லிவிடுகிறோம். இரண்டாவதாக, நம் மொழியிற் சொல் இருந்தாலும் பிறமொழிச் சொற்களைக் கையாளுவதால் நாகரிகம் நிரம்பியவர் என மதிக்கப் படுவோம் என்ற தப்பான எண்ணத்தால் நம் சொற்களை விட்டுப் பிறமொழிச் சொற்களை ஆளுகிறோம். சோறு என்றும், தண்ணீர் என்றும், உணவு என்றும், ஆடை என்றும் நல்ல தமிழ்ச்சொற்கள் இருக்கவும், சாதம், ஜலம், போஜனம், வஸ்திரம் ஆகிய சமஸ்கிருத சொற்களை வழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டிய காரணம் என்ன? "போஜனம் ஆயிற்றா?" எனக் கேட்பது தமிழ் மரபு எனக் கூறிய முதியவர் "தமிழ்ப் பொழிலில்" பட்டபாடு தமிழறிஞர்கள் அறிவர். "எது தமிழ் மரபு?" என்ற தலைப்பில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய கட்டுரையிற் காண்க.

தலை, அடி, கை, கண், பல் முதலிய நல்ல தமிழ்ச் சொற்கள் இருப்பவும், சிரஸ், பாதம், கரம், நேத்திரம், தந்தம் முதலிய வடமொழிச் சொற்களையோ, ஹெட், புட், ஹாண்டு ஐ, டூத் முதலிய ஆங்கிலச் சொற்களையோ ஆளவேண்டியது இன்றியமையாததுதானா?

கோயில், பூ, விளக்கு முதலிய நல்ல நல்ல தமிழ்ச் சொற்கள் இருப்பவும், ஆலயம் புஷ்பம் தீபம் என்ற வடமொழிச் சொற்களையே கையாள வேண்டுமென்பது விதியா?

"பால லோசன பானுவி லோசன
பாம லோசன பக்தசி காயமா
கால காலத்ரி சூலக பாலவே
கம்ப சாம்பக டம்பவ னேசனே"

என உள்ள ஒரு தோத்திரப்பகுதி எத்தனை தமிழ் மக்களுக்குப் புரியும்?

அல்லது, கீழ்க்காணும் உரைநடைதான் எவ்வளவு தமிழ் மக்களால் விரும்பப்படும்? "கீழ்க்கண்ட காரியங்களை வர்ஜிக்கவும். அக்நியை வாயால் ஊதி ஜ்வலிக்கச் செய்வது, அசுத்த காஷ்டாதிகளால் சரீரத்தைச் சொரிந்து கொள்ளுதல், பார்யையுடன் சேர்ந்து சாப்பிடுவது, கெட்ட வழியால் தேவாலய க்ருஹாதிகளில் ப்ரவேசித்தல், கட்டில் முதலிய ஆஸநங்களிலிருந்து புஜிப்பது, வ்ருக்ஷத்தில் ஏறுவது, விஷமத்தில் இறங்குவது." (கௌதம தர்ம சாத்திர மொழிபெயர்ப்பு) இவ்வாறு எழுதுவதைச் சிலர் இனிமையாக

இருக்கிறது என்பர். பலர் காதுக்கு வெறுப்பாக இருக்கிறது என்பர்.

இதைப்போன்ற நடையை இடைக்காலத்தில் சமணர்கள் கையாண்டனர். எடுத்துக்காட்டாக, வர்த்தமானர் புராணத்தில் உள்ள சிவகன் வரலாற்றிலிருந்து ஒரு பகுதியை நோக்கலாம். "அவனும் 'ஆதரித்து, கந்தயுக்தி முதலாகிய வித்தைகளை எனக்கு உபதேசிக்க வேண்டும்' என்று பிரார்த்தித்து அப்யஸியா நின்றவிடத்து, மற்றொருநாள் வித்யாதி தேவதா பூஜா வ்யாஜத்தினால் ஒருத்யானம் அடைந்து ஏகாந்தமாகத் தனது ஸ்வரூபத்தைக் காட்டிப் பின்னரும் விச்வாஸார்த்தமாகச் சூர்ண விவாத வ்ருத்தாந்தத்தினையுஞ் சொல்லிக் கரதல ஸ்பர்சன ஸுகம் அனுபவித்தபின், அவனும் லஜ்ஜாஸ்நேக பரவசையாகி நிற்ப, பின்னும் தனது வ்ருத்த வேஷங் கொண்டு வித்யா தேவதா பூஜை பண்ணியபின், இந்த வ்ருத்தாந்தத்தினைப் பந்து ஜனங்கள் அறிந்து மிகவும் ப்ரீதர் ஆகி, ஜீவந்தர குமாரனுக்குக் குணமாலையை விவாக விதியாற் கொடுத்தார்."

இவ்வாறு அமைந்த நடையை "மணிப்பிரவாளம்" என்றனர். முத்தும் பவழமும் சேர்த்தாற்போன்று இனிமையாக இந்நடை உளது என்பது அச் சமணர் கருத்து. ஆயினும், வேறு சிலர் தனி முத்து மாலையின் அழகிலும், தனிப் பவழமாலையின் அழகிலும் ஈடுபடுதல் இயல்பே. அது போலப் பலர் தனித்தமிழ் நடையிற் பற்றுடையராய் இருத்தல் இழுக்கன்று. அன்றியும், வேறு சிலர் பல முத்துக்களிடையே ஒன்றிரண்டு பவழங்களை எதிரெதிராகக் கட்டி அழகு காண்டலும் ஒக்கும். அதுபோலப் பல தமிழ்ச் சொற்களின் இடையே இன்றியமையாத சில வேறு சொற்களை ஆளுதலும் குற்றமில்லை என்க. அவ்வாறு ஆளுங்கால் தமிழொலியில்புக் கேற்ப அவற்றைத் திரித்துக் கொள்ளுதலே தொன்று தொட்ட வழக்கம் என்பதும் அறியத் தக்கது.

இவைபோன்ற கருத்துக்களை கொண்டவர் கவியரசர் வேங்கடாசலம் பிள்ளை, அதனால்தான், அவரைச் "செந்தமிழ்க் காவலர்" எனச் சொல்லக் கருதினேன்.

அவரை ஒத்த கருத்துடையவராய் முன்னர் வாழ்ந்து, தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டாற்றிய "பரிதிமாற் கலைஞர்" என்னும் வி. கோ. சூரியநாராயண சாத்திரியாரை இன்று நினையாதிருத்தல் இயலாது. அதனால், "வடமொழிக் கலப்பு" என்பதுபற்றிப் பரிதிமாற் கலைஞர் எழுதிய கட்டுரை யொன்றிலிருந்து கீழ்வரும் பகுதியைத் தருகின்றேன். சாத்திரியார் அவர்கள் எழுதுவது இது :—

"இந்நிலைமையில் சைனர் எழுந்தனர். அங்ஙன மெழுந்த சைனர் ஆரியரது ஆசாரங்களுட் பலவற்றை மேற்கொண்டனர்; அஃதன்றியும் வடமொழியின் கண் விசேஷ கௌரவம் உடையவராய் அதனைப் பெரிதும் பயில்வாராயினர். இத்தகைய சைனப் புலவர்கள் தமிழ்மொழியையும் அப்பியசிக்கப் புகுந்து, தமிழின் கண்ணே அளவிறந்த வடசொற்களை ஏற்றினர். அத்துணையோடமையாது, 'மணிப்பிரவாளம்' என்றதோர் புதிய பாஷை விடுத்துவிட்டனர். அஃதாவது தென்மொழியும் வடமொழியும் சரிக்குச் சரி கலந்த பாஷையாம். மணியும் பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கு இன்பம் பயத்தல் போலத் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த பாஷை கேள்விக்கு இன்பம் பயக்கும் என்ற போலியெண்ணமே இத்தகைய ஆபாச பாஷை ஒன்று வகுக்குமாறு தூண்டிற்று. 'ஸ்ரீபுராணம்' என்னும் சைன நூல் முழுதும் மணிப்ரவாளம் என்னும் இவ் வாபாச நடையில் இயன்றதாமாறு காண்க. இவ்வாறு சைனர் ஒருபுறஞ் செய்துகொண்டு செல்லா நிற்க, மற்றொரு புறத்தில் ஆரியப் புலவர் சிலர் தமிழ் மொழியை அப்யசித்துக் கொண்டு, நீதி மார்க்கத்தையும் சமய சாஸ்திரத்தையும் தமிழர்க்குப் போதிப்பேம் எனப் புகுந்து, தமது கருத்துக்களை எல்லாம் மேற்கூறிய மணிப்பிரவாள பாஷையில் வெளிப்படுத்துரைப்பாராயினர்".

இங்ஙனம் சாத்திரியார் அவர்கள் தமிழ்மொழி வரலாற்றின் கண்ணே பொறித்து வைத்துள்ளார்கள். அவர்கள் கருத்துப்படி மணிப்பிரவாளம் ஆபாச நடையை நீக்கி நல்ல நடையைப் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும் என அடிக்கடி கூறியும் எழுதியவர்களுள் தலைசிறந்தவர் வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.

பிறமொழிச் சொற்களைத் தவிர்த்தல் என்பதால், பிறமொழியின்கண் வெறுப்புடையோம் என நினைத்தல் ஒவ்வாது; நம் மொழியிடத்து மிக்க காதல் உடையோம் என்பதே கருத்து. பிறமொழிச் சொற்களைக் குறைத்தோ நீக்கியோ எழுதவேண்டும் என்று கூறுவதன் நோக்கம் யாது?

தமிழ் நாடோறும் நாடோறும் பிறமொழிக் கலப்பே மிக மிகப் பெற்றுவிட்டால், முடிவில் தமிழ்ச்சொற்கள் அருகிச் சுருங்கிப் பிற சொற்கள் பெருகிப் பல்கிவிடும். அதனால், அடுத்த நூற்றாண்டில் தமிழைப் பார்க்கும் ஒருவன் தமிழ் என ஒரு தனி மொழி இல்லை எனவே கூறத் தலைப்பட்டு விடுவான். தமிழ் உரைநடை வழக்கிலும் பேச்சு வழக்கிலும் தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக வடமொழிச் சொற்களை வழங்கிவந்தால், தமிழ்மொழி வடமொழியினின்றே பிறந்தது என்பார் கூற்று நாளடைவில் வலுத்துப்போம். அன்றியும், அடுத்த நூற்றாண்டுத்தமிழ் இந் நூற்றாண்டின் தமிழோடும் சங்ககாலத் தமிழோடும் வேறுபட்டு வேறுபட்டுத் தோன்றும். அவ் வேறுபாட்டின் மிகுதியால், இருபத்தோராம் நூற்றாண்டைய தமிழன் இருபதாம் நூற்றாண்டின் நூல்களை அறிந்துகொள்ள மாட்டாதவன் ஆகிவிடுவான்; கம்பனை, இளங்கோவைத் திருவள்ளுவரைப் பரணரை அறிய முடியாதவன் ஆகிவிடுவான். தொல்காப்பியர் காலத்தொட்டே பிற மொழியின் வருகைக்கு ஓர் எல்லை வகுத்ததால் அன்றோ, தொல்காப்பியமும் திருக்குறளும் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் இன்றும் தமிழர்க்கு விளங்கலாகா நூல்கள் என்னமாட்டாத நிலையில் உள்ளன.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே"

இது தொல்காப்பியம்—பழந்தமிழ்தான். ஆயினும் ஆயிர வாயிரத் தமிழர் இதன் பொருளை அறிதலில் இக்காலத்தும் இடர்ப்படார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"

இது திருக்குறள்—பழந்தமிழ்தான். ஆயினும் நூறாயிரக் கணக்கான தமிழர் இன்றும் பொருள் உணர்வர். இந்நிலை மாறிவிடும், பிற மொழியின் கலப்பு பல்கி விடுமாயின். நூற்றாண்டு தோறும் ஆங்கிலம் மாறி மாறி வந்துள்ளமையால், ஆயிரம் ஆண்டுகட்கு முந்திய ஆங்கில இலக்கியம் இக் காலத்து ஆங்கிலர்க்கு விளங்கவே விளங்காது; அவர்கட்கு அது கிரீக்கு, லத்தீன் போன்ற பிறமொழிகளைப் போலவே தோன்றும். இதைப்போன்ற நிலை தமிழுக்கு வந்து எய்த வேண்டாம் என்பதே விழைவு.

"செந்தமிழ்க் காவலர் மறைந்தார்; செந்தமிழ் வாழ்க.

கரந்தைக் கவியரசு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

தென்னாட்டுக் கரந்தைப் புலவர் கல்லூரியினை வளம்பட வளர்த்த கருணைமுகில், பொன்னாட்டுப் புலவர்களுக்குத் தமிழின்னுரை யியம்பி, நூன்மழை பொழிய அமைவாய்ச் சென்றமையான், அக் கல்லூரி, தமிழ் விருந்தமுதூட்டும் கவியரசை இழந்தது. புலந்திகழ் சங்கத்தியற்றமிழ் பனுவல்களும், இலக்கண நூல்களும், வடித்த நூல் கேள்வியுடைய கலைஞர்கோனை இழந்து கதறின. தொண்டை எதிர் பார்த்திடாது பாடமுறையினை மகிழ்வோடு செய்யும் வகையினையும், இருளற்ற ஒளி காட்டும் அவரது சொல்லாடலின் இனிமை வாக்கினையும், இனிக் காண்டிலாக் குறையால், அவர்பால் இலக்கணம் இலக்கியம் கற்றிடும் மாணவர்கள் நலிந்து பேதுறு சிந்தையராய் அலமரலுற்றனர்.

வாழ்வின் இறுதி நிறைவிற்காக, கவியரசு, வாழ்வில் நேரும் இன்னாமை யாவையும் இன்பமெனக் கருதும் மனத்திட்பமும், மல நீக்கத்தில் திருவருட்பதிவும் வாய்க்கப் பெற்றவராதலால், வெய்ய கூற்றுவனுக்கு இவர்பால் வேலையில்லாது போயிற்று. இத் தமிழகம், சித்தி முத்திப் பேற்றுக்குச் சாதனமான மக்கள் யாக்கை நிலவுவதற்குத் தக்க இடமாக யிருப்பினும், இவரது பயனுடைய யாக்கையினை வைத்திடச் செய்யுமாறு திருவருளின் சிற்பத்தை மாற்றிட வல்லவர் இவ் விஞ்ஞான வுலகிலிலரே!

வையக வாழ்க்கை, எதுபோதும், சாவின் சாகசன் என்பதைக் ஐயமுற யுணர்ந்த கவியரசு, தம் வாழ்வினிலே, தமிழ் நூன் மரபின் நெறியினைத் தமிழகத்தில் தழைத்தோங்கிப் பிறங்கச் செய்ய, பாவுற்ற வண்டமிழ் மாண்பினை உள்ளத்தால் உணர்ந்து கலந்து கவியை அறியும்

திறமையினை இயல்பாயுடையவர். பொறைக் கயிற்றில் நிறை புலமைக்குரிய மெய்ப்புகழைப் பிணித்த நற்றமிழ்க் குரவர். மற்றும் தமிழ்ப் புலமைச் செல்வருளே, இச் செம்மலார் பண்டேய்த்த புகழினாரென்பது முற்றும் பொருந்துவதாகும். இதனான் தமிழ்மொழியறிவினை நாடும் வீரியத்தினவு நிரம்பிய மனமுடைய மாணவர்களுக்கு, இவர் மண்ணில் வளரும் மதிக் கொழுந்தாய் விளங்கினார். புல்லறிவகற்றி நல்லறிவினை, புலவர் போற்றும் நாவன்மையோடு நகைச்சுவை தோன்ற நவிலும் வித்தகர். இத் தகைய வான்புலமை நாவலரின் இன்ப ஒளியில், கவிச் செருக்கு வெட்கி மறையும். தன் பெருமையினைத் தானறியாத இவரது நன்றிகனிந்த உள்ளத்தில், விரிபுலமைச் சான்றோர் என்றும் வானோங்கிப் பரந்து பொலியும் கவிக் கனலைக் காண்பர். மற்றும் கவியரசு, தமிழ் நலனுகர்ந்து அதன் பயனால், பைந்தமிழை யாழாக்கித் தமிழ்ப்பாவிசைத்துமாறாது வழங்கும் மாண்சிறப்பெல்லாம், அவர் பாங்கடைந்து பழகும் தமிழை யறாது போற்றும் பேறுடைய தகையாளர்க்கே புலனாகும்.

தமிழன்பினில் அறிவு சுரக்க வாழ்த்துரையும் பொன்னுரையும் அன்புடன் மலர்த்தி, ஒள்ளிய நடையில் அகத்திறமெலாங் காட்டி வாழ்ந்த இவர், தன் தமிழ்ப் புலமையின் எழிலை, தன்னை வளர்த்த தமித்தாய்க்கே நிவேதித்துள்ளார். அகங்குழைந்து தம்பால் செந்தமிழ்ப் பயில்வாரை வாழ்வாங்கு வாழச் செய்தற்குரிய இவரது புலமையியல்பினை விரித்து இறுதி காண்பது அரிதாம். சற்று உரைப்பான்புகின், அதனை விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சு மென்க. தமிழகத்தரசு, பண்டு தமிழ் மொழியின் இன்பத்திற்காக வயங்கி வாழ்ந்ததைக் கண்டுணர்ந்த கவியரசு, தானும் தெள்ளு செந்தமிழின் சக்திக்காகவே வாழ்ந்து, தமிழ்ப் புலமைக்கு உரையாணியாக விளங்கினரென்பது அறியப்படும். பழந் தமிழிலக்கிய உலகை, தன்னுரைவழி, சாலவளஞ் செய்யும் அயரா உழைப்பில் துலங்கும் இவரது வாழ்வே, ஏமஞ்சான்ற கன்னித் தமிழ் வாழ்வெனக் கொள்க.

எச்சம்.

வித்துவான். ஆ. சிவலிங்கனார், விரிவுரையாளர்,
சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். (குறள் 114)

இக்குறளில் காணப்படும் 'எச்சம்' என்பதற்குப் பொருள் பரிமேலழகரும் மணக்குடவரும் வெவ்வேறாகக் கொண்டுள்ளனர். இக்காலத்துப் பிறர் வேறாகவும் கொள்கின்றனர். இவற்றைப்பற்றிச் சிறிது ஈண்டு ஆய்வாம்.

"இவர் நடுவுநிலைமையிலர் என்னும் விசேடம், அவரவருடைய நன்மக்களது உண்மை யானும் இன்மையானும் அறியப்படும்" என்று உரை கூறி, "தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கில்லை யாதலும் ஒருதலையாதலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின; இதனால் தக்காரையும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது." என விசேட உரையும் கூறினர், பரிமேலழகர். இவர் 'எச்சம்' என்பதற்கு 'நன்மக்கள்' எனப் பொருள் கொண்டனர்.

மணக்குடவர் இதற்கு,

"செவ்வை யுடையார் செவ்வையிலர் என்பது அவரவர் ஆரவாரத் தொழிலினானே காணப்படும்." என உரைகூறி, "இது தம்மளவிலே நிற்பதல்லது தம்மக்களையும் விடாதென்பதுகூறிற்று" என விசேடமும் கூறினர். இவர் 'எச்சம்' என்பதற்கு 'ஆரவாரத் தொழில்' என உரையிற் கூறிப் பின் 'மக்கள்' எனக் கொண்டுள்ளனர். விசேடத்திற் கூறியதற்கேற்ப உரையில் 'ஆரவாரத் தொழிலால்' என்பதற்குப் பதில் 'மக்களால்' எனக் கொள்ளலாம் என்க.

'எச்சம்' என்பதற்கு நேர்பொருள், சென்றதுபோக மிஞ்சியது அதாவது மிகுந்தது என்பதாகும். அது 'குறைவு' என்ற பொருளிலும் வரும்.

"எஞ்சி யோர்க்கும் எஞ்சுத லிலவே"

என்ற தொல்காப்பிய நூற்பாவில் 'மிகுதல்' 'குறைதல்' என்ற இரு பொருளும் வந்தமை காணலாம். எனவே மிகுந்தது எது? அது எச்சம்; குறைந்ததெது? அது எச்சம் எனப் பெறலாம்.

ஈண்டு 'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' என்ற பொருளே சிறக்கும் என்னலாம். பெற்றோர் குணம் எஞ்சிய இடம் எச்சம் எனப்பட்டது. அவ்விடம் மக்களே என்க. மக்கள் எனவே நன்மக்களும் தீயமக்களும் அடங்குவர். "தாயைத் தண்ணீர்க் கரையில் பார்த்தால் பெண்ணை வீட்டில் பார்க்கவேண்டியதில்லை "என்ற பழமொழியை ஈண்டு நாம் நினைவுக்குக் கொண்டுவருதல் நல்லது. இதுகொண்டு மக்கள் தீயராயின் பெற்றோர் தகார் என்றும், நல்லர் ஆயின் தக்கார் என்றும் அறியலாம். அதனால் பரிமேலழகர் 'நன் மக்கள்' எனக் கொண்டது பொருந்துவதன்றென்றும் மணக்குடவர் பொதுவில் மக்கள் என்றதே பொருந்தும் என்றும் அறியலாம்.

பரிமேலழகர் "தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலை" என்றார். தக்கார்க்கே பிள்ளைப்பேறுண்டாம்; தகார்க்கு உண்டாதல் இல்லை என்பது அவரது கூற்றின் பொருள். அவ்வாறாயின் இது உலகியலோடு மாறுபடக் காண்கின்றது என்னலாம். தீயொழுக்கம் மிகவுடையவர்க்குப் பிள்ளைகள் மலிந்திருத்தலையும், நல்லொழுக்கம் உடையவர்க்கு இல்லாதிருத்தலையும் காண்கின்றோம். அதனால் தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் என்பதற்குத் 'தக்கார்க்கு நன்மக்கள் உண்டாதலும் என்றும்,' தகவிலார்க்கில்லையாதலும் என்பதற்கு 'தகவிலார்க்கு அந்நன்மக்கள் இல்லையாதலும் (எனவே தீயமக்கள் உளவாதலும்) என்னும் பொருள் கொள்ளலாம். அவரது விசேட உரைக்கு, இதுவே சிறக்கும் என்க. இதற்கேற்ப உரையிலும் 'நன்மக்களது உண்மையானும் இன்மையானும்' என்பதற்கும்' நன்மக்களது உண்மையானும் நன்மக்களது இன்மையானும் (அதாவது தீயமக்கள் உண்மையானும்) எனக் கொள்ளவேண்டும். இவ்வாறு கொள்ளின் பரிமேலழகரும் மணக் குடவரும் ஒரே கருத்தினர் என்னலாம்.

இனி ஒரு சாரார் கூறுவதைக் காண்போம். ஒருவன் இறந்த போது அவனால் அவனைப்பற்றியதாக இவ்வுலகில் நிற்பது—அதாவது எஞ்சியிருப்பது எதுவோ அதுவே 'எச்சம்' எனப் பெயர்பெறும். அது புகழ் அல்லது இகழ் ஆகலாம்.

"எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்" (குறள் 1004)

என்ற குறளில் அவ்வாறு 'எச்சம்' என்பதற்குப் பொருள் கொண்டவாறு காணலாம். எனவே, "தக்கார் தகவிலார்" என்ற குறளில் வரும்

'எச்சம்' என்பதற்கும் புகழ் அல்லது இகழ் எனக்கொள்ளலாம். அக்குறளின் உரை, "இவர் தக்கார் என்பது அவரவர் இறந்த பின்னர் அவரால் விட்டுச் செல்லப்படும் புகழ் இகழ்களால் அறியப்படும்" என்பதாகும்.

இவ்வாறு அவர் எச்சம் என்பதற்குப் புகழ் இகழ் எனக் கொண்டமைக்குக் கூறப்படும் காரணம், "பிள்ளையின்றி யிறந்தானுடைய தகுதியை யறிய முடியாதாதலின் மக்கள் என்பது பொருந்தாது என்பதேயாம். இனி அவர் கூற்றினையும் மக்கள் என்பார் கூற்றினையும் சிறிது காண்பாம்.

நல்லோர்க்கு நல்லன விளைதலும் தீயோர்க்குத் தீயன விளைதலும் பெரும்பாலும் நிகழ்வனவேயாம். நல்லோராகிய தக்கார்க்கு நன்மக்கள் தோன்றுவதும் தீயோராகிய தகார்க்குத் தீய மக்கள் தோன்றுவதும் உண்டு. தீயோர்க்கு மக்கட்பேறின்றி யிருந்தாலும் நல்லோர்க்கு அவ்வாறிராது. இந்த உறுதிப்பாட்டினை மனதிற்கொண்டதனால் தான் பரிமேலழகர், "தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலை" என்றார், திருவள்ளுவரும் நல்லோர்க்கு நல்லனவே விளையும் தீயோர்க்குத் தீயனவே விளையும் என்ற கொள்கையினரேயாவர் "நல்லோர்க்குக் கேடும், தீயோர்க்கு ஆக்கமும் என்றும் விளையா; ஓரோரிடத்தில் காணநேரின் அதுகொண்டு கருத்து மாறுபடாது சற்று நினைத்து ஒரு முடிபிற்கு வருக" என்றார் வள்ளுவர். அம்முடிபு ஊழ் காரணம் எனக்கொண்டு நிறுத்தும் என்றார்.

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்" (குறள் 169)

என்றார் அவர். எனவே நல்லோர்க்கு நல்லன விளையுமாதலின் நன்மக்கள் உண்டாதலும் தீயோர்க்குத் தீயனவே விளையுமாதலின் தீய மக்கள் உண்டாதலும் அன்றி இல்லையாதலும் நிகழ்வனவே என்க.

மக்களை விரும்பாதவர் உலகில் இலர்; அதனால் நல்லோர் மக்களை விரும்புவர்; அவர்க்கு நன்மக்களே தோன்றுவர் என்க. நல்லோராயிருந்தும் மக்கட்பேறின்றி யிருப்பரேல் அதன் காரணம் வள்ளுவர் கூற்றுப்படி முன்னை ஊழ்எனக் கொள்க.

இனி நல்லோர்க்குத் தீய மக்கள் தோன்றுதலும் தீயோர்க்கு நன்மக்கள் தோன்றுதலும் காண்கின்றோமே யெனின் அவையும் சிறு

பான்மை எனக்கூறி 'ஊழ்' என்ற முடிபிற்கு வருக. ஆனால், தீக்குணங்கள் நிரம்பப் பெற்றவராயிருந்தும் வெளியில் காண்பாரக்கு நல்லவர் போன்று நடிக்கும் வஞ்ச மனத்துப் படிற்றொழுக்கத்தினரும் உளர்; அவர்களை நல்லோர் என மயங்கி அவர் தம் மக்கள் தீயோரானமையின் அவரைக்காட்டிப் பேதுறுத்துவது நன்றன்று. அவர்தம் ஒழுக்கம் பசுத் தோல் போர்த்த புலி நிலையை ஒத்ததென்க. இத்தகையார் இன்றைய உலகில் பலர்.

இனி 'ஒருவர்க்கே நன்மக்களும் உளர்; தீயமககளும் உளர் எனின்; அவ்வொருவரைத் தக்கார் என்பதா தகார் என்பதா' என்ற வினா எழலாம். ஒருவர்க்குக் குணம் மூன்று. உயர்வு, தாழ்வு, இடை நிலை என்பன. சத்துவ குணம் எக்காலத்தும் தாழாதது. எக்காலத்தும் தாழ்ந்தது தாழ்குணம். உயர் குணத்துடன் சார்ந்தால் உயர்வும் தாழ்ந்ததுடன் சார்ந்தால் தாழ்வும் அடைவது இடைநிலைக்குணம். இச்குணங்களுள் உயர்குணம் உள்ளவரே 'தக்கார்' என வள்ளுவரால் கூறப்பட்டவர். தாழ்குணம் உள்ளவரே 'தகார்' எனக் கூறப்பட்டவர். எனவே தக்கார்க்கு நன்மக்களும் தகார்க்குத் தீமக்களும் தோன்றுவர் இடைப் பட்டவர்க்கோ இருகுண மக்களும் தோன்றுவர் என்க. அவர் சிற்சில காலங்களில் உயர்குணம் உடையராவர்; அக்காலங்களில் தோன்றும் மக்கள் நன்மக்களாவர். சிற்சில காலங்களில் தீக்குணம் உடையராவர்; அக் காலங்களில் தோன்றும் மக்கள் தீயமக்களாவர். அதனால் மக்களைக் கொண்டு அவரை இடைப்பட்டவர் எனக் கொள்ளவேண்டும். நல்லவர் அல்லாதவரைப் பொதுவில் தீயோர் என்றலின் இடைப்பட்டவரையும் தியோர் என்று 'தகார்' என்றே கொள்வர் ஆன்றோர். எனவே தக்கார்க்கு நன்மக்கள் தோன்றுதல் உறுதி என்க.

இனி 'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' என்றாலே சிறக்கும் என் பதற்கு இக்குறளும் சான்றுபகரும்.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து (குறள் 112)

இதற்குப் பரிமேலழகர், "செப்பம் உடையவனது செல்வம் பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன் வழியிலுள்ளார்க்கும் வலியாத லுடைத்து" எனப் பொருள் கூறினர். மனக்குடவர் "நடுவு நிலைமை யுடையவனது செல்வம் தன்னளவிலும் கேடின்றியே நின்று, தன்வழியி லுள்ளார்க்கும் கேடு வாராமற் காவலாதலையுடைத்து" என்றனர்.

இருவர் கருத்தும் ஒன்றுதல் காண்க. இக் குறளுக்கு, "செப்பம் உடையன் ஆக்கமானது அவனால் விட்டுச்செல்லப்பட்ட புகழ்க்குக் காரணமான அறச் செயலுக்குப் பாதுகாவலையுடைத்து" என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் 'எச்சம்' என்பதற்குப் புகழ் இகழ் என்பன இரண்டும் உண்டு ஆதலின் புகழே கொள்ளவேண்டிய நிலையில் பொருள் கூறல் சிறவாதென்க.

இனி, 'எச்சம்' என்பதற்குப் புகழ் இகழ்கள் என்றுற்படும் இழுக்கு என்னையெனின் இழுக்கு அத்துணையில்லையாயினும், "பிள்ளைகள் இல்லையெனின் தக்கார் தகவிலர் என அறியமுடியாது. ஆதலின் 'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' என்னும் பொருள் பொருந்தாது" என்று கூறுவது போலவே, "உலகில் புகழ்ச்செயலோ இகழ்ச் செயலோ செய்யாது இறப்போரையும் தக்கார் தகவிலர் என அறிதல் இயலாதாதலின் அச் சொற்குப் 'புகழ் இகழ்கள்' என்றலும் பொருந்தாது" என்றுகூறி அதனை மறுக்குமளவில் உள்ளது என்னலாம்.

உலகில் பிறந்தான் ஒருவன் புகழ்ச் செயலோ இகழ்ச் செயலோ செய்யாதிரான். இவ்விரண்டுமின்றி யிறந்தான் எனினும் அவன் இகழற் பாட்டிற் குரியவனே.

"வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்" (குறள் 238)

என வள்ளுவர் கூறியிருத்தலைக் காண்க. பரிமேலழகரும், "இகழற்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டா என்பது கருத்து" என்று வள்ளுவர் புகழ் பெறாததையே குற்றமாக்குவதாகக் கூறினர். புகழ் இன்றெனின் இகழ் உளது என்றலின் இரண்டும் இன்றி யிறந்தான் என்றல் சாலாது என்க. ஒருவன் உயர்குணம் உடையவனாகி யிருந்தும் அது வெளிப்படுதற்குரிய வாய்ப்பின்றியும் புகழ்பெறுதற்குரிய செயல் செய்யப் பொருள் முதலிய இன்றியும் வாளா இறத்தலும் உண்டு அதனால் அவனுக்கு உலகில் புகழ் இராது. ஆனால் அவன் மகன் ஒருவன் நல்ல நிலையுற்று நற்செயல் பலபுரிந்து புகழ் பெறுவானேல் அவனால் அவன் தந்தைக்கும் புகழ் உண்டாகும்.

மகன்தந்தைக் காற்றும் உதவி யிவன்தந்தை
என்நோற்றான் கொல்லென்னும் சொல் (குறள் 70)

என்று காயனார் கூறியதன் பொருளை நன்றாக நோக்குதல் வேண்டும். மகன் தந்தைக்குப் புகழ தரவேண்டும். தந்தை செய்து நிறைவேற்ற வேண்டிய புகழை மகனே நிறைவேற்றுகின்றான். அதனாலன்றோ

“……………… மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே” (புறம் 188)

என்றான் பாண்டியன் அறிவுடைநம்பி தந்தை புகழ் பெறாது உயிர்வாழ அவன் மகன் நல்ல புகழ் பெற்றாலும் அப்புகழ் தந்தைக்கும் உரியதாகும்

“இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்”. (அகம் 66)

என்ற அகப்பாட்டொன்றின் அடிகளும் கூறுதல் காண்க.

“நீவாழியர்; நின் தந்தை தாய் வாழியர் நிற்பயந்திசினோரே” என ஒரு புலவர் நாஞ்சில் வள்ளுவன் என்ற வள்ளலைப் பாடியது கொண்டு ‘மகனைக்கொண்டு தந்தையைப் புகழ்வர்’ என்பதை நாம் உணரலாம். நாஞ்சில் வஞ்ளுவன் குண நலத்தால் பெற்ற புகழ்கொண்டு “அத்தகைய புகழ்பெற்ற நின்னையீன்ற தந்தை தாயார் வாழ்க” என்றார் புலவர். அவனால் அவன் பெற்றோர் வாழ்த்தப்பட்டனர். எனவே புகழ் இன்றி இறந்த ஒருவனை அவன் மகன் புகழ் உடையவனுக்குதவின் அவன் தக்கோனே யாவான் என்க. அவன் தகுதி மகனிடத்து எஞ்சியதால் மகனும் தக்கோனாகித் தந்தையையும் புகழ்க்குரியனாக்கினான் என்க. இகழ்க்கும் இவ்வாறே மாறுதலாகக் கொள்க. எனவே, ஒருவன் வாய்ப்பின்மையால் புகழ் இகழ் இன்றியும் இறத்தலுண்டு என்னலாம்.

‘எச்சம்’ என்பதற்குப் ‘புகழ் இகழ்கள்’ எனக்கொண்டால் ஒருவனின் புகழ் இகழ்களால் அவனையறிய முடியும் என்றாகி அவனளவில் நின்றுவிடும். ‘மக்கள்’ என்று கொண்டால் ஒருவனின் மகன் அல்லது மக்கள் பெறும் புகழ் இகழ்களால் அவனையறிய முடியும் என்றாகி அவனளவில் இன்றி அவன் பின்னோர் அளவிலும் செல்லும். ஆதலின் ‘மக்கள்’ எனக் கோடலே சிறக்கும் என்னலாம். அதனாலன்றோ மணக்குடவரும், “இது தம்மளவிலே நிற்பதல்லாது தம் மக்களையும் விடாது என்பது கூறிற்று” என்றார்?

ஒருவன் உயிர்க் குணத்திற்கும் புகழ் இகழ்கட்கும் சிற்சில சமயங்களில் தொடர்பில்லாமலும் போய்விடும். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் சிறந்த செங்கோல் வேந்தன்.

கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
வாள்வலி வேங்கையும் மான்கணம் மறலா
அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் றென்னவன் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே
(சிலப் 13, 5–10)

என இளங்கோவடிகள் இவன் செங்கோற் சிறப்பினைக் கூறுதல் காண்க இவன் உயிர்க்குணம் சிறந்ததேயாம். ஆனால் இவன் கோவலனை ஆராயாது கொலைப்படுத்தி விட்டான். கோவலன் கொலையுண்ணவேண்டும் என்றிருந்த ஊழ் இவனைக் கொடுங்கோலனாக்கியது. புகழ் பெற்ற அரசன் இகழ் பெற்றான். அவன் இறந்தபின் நிலைத்தது இகழ். இதனால் அரசனைத் தகவிலன் என்று கூறிவிடமுடியுமா? அவன் தக்கோனே என்பதை, மதுரை நகர்த் தெய்வம் கண்ணகி முன் தோன்றி ‘தென்னவன் தீதிலன் என்றதாலும், கோவலன் கொலையுண்டது’ கேட்ட செங்குட்டுவன்

“வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது”

என்று மன்னவன் தவறு கூறாது வல்வினை வளைத்ததாகக் கூறி அம்மன்னவன் உயிரின் குணம் நல்லதே என்பான் “செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது” என்று கூறியதாலும், செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல்லெடுத்து வழிபட்ட காலத்தில் கண்ணகி தோன்றி “தென்னவன் தீதிலன்” என்றதாலும் நாம் அறியலாம். என்றாலும் உலகில் அவனுக்கு நிலைத்தது இகழேயாம்.

இராவணன் தீயோன் எனத் தூற்றப்பட்டான். அவன் சிறந்த சிவபக்தன்... தன்னைச் சார்ந்தோர்க்கு நன்மையும் எதிரிக்குத் தீமையும் செய்தவன். இது அரசர் கைக்கொள்ளும் முறைதானே! அவன் சீதையை விரும்பினான் என்ற காரணத்தால் வந்தது பழி: தீயோன்

எனப்பட்டான். அவன் சிவபக்திக்குணம் மறைந்தது. காமக்குணம் மிகுந்தது. உலகில் எஞ்சியது இகழ்தான். அவன் தம்பி விபீடணன் சிறந்தவன் எனப்பட்டான். ஆனால் அவன் செய்தது உலகியல் நிலையில் இகழ்ச்சிக்குரிய செயல் ஒன்றுண்டு. போர்க்காலத்தில் கும்பகருணனைப் போல் அண்ணன் பக்கமே நில்லாது அண்ணனைப் பிரிந்து இராமன் பக்கம் சேர்ந்துகொண்டு தன் இனத்தாரையே காட்டிக்கொடுத்தான். இவ் விழிவு மறைந்தது. இவனது சரணாகதிப் புகழ் மிகுந்தது.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்" (குறள் 504)

என்ற வாக்கிற்கேற்ப இராவணன் காமத்தீமையின் மிகையால் இகழப் பட்டான் என்றும் சரணாகதிப் பெருமையால் விபீடணன் புகழப்பட்டான் என்றும் கூறலாம். ஆனால் இன்றைய உலகம் விபீடணனை இகழத்தான் செய்கிறது. காட்டிக்கொடுப்பாரைக் குறிப்பிடும்போது, (ஆழ்வார் என வணங்கும் வைணவருங்கூட) விபீஷணக்கும்பல் எனக் குறிப்பிடுகின்ற னர். எனவே அவன் இகழவும் படுகின்றான், புகழ் இகழ்கள் உலகமக்க ளால் பேசப்படுவன. மக்களின் அவ்வக்கால மன நிலைகளுக்கேற்ப புகழும் இகழாம்; இகழும் புகழாம். விபீடணன் நிலை அவ்வாறுபட்டது தான். அதனால் மக்கள் மன நிலைகளுக்கேற்பத் தோன்றும் புகழ் இகழ் களுக்கும் அவற்றிற்குரிய ஒருவன் உயிர்க்குணங்களாகிய தகுதியுடைமை யின்மைகட்கும் தொடர்பில்லாமலும் சிற்சில சமயங்களில் இருத்தலின் எச்சம் என்பதற்கு 'புகழ் இகழ்கள்' என்பதை விட 'மக்கள்' என் பதே சிறக்கும் என்னலாம்.

முடிவாக 'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' என்றே பொருள் கொண்டனர் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்பதை அவரது வாக் கொன்று கொண்டு அறிந்து இக்கட்டுரையினை முடிப்போம்.

விளங்குளாபுரியில் மாதரசன் என்பானுக்கும் மாதாம்பிகை என் பாளுக்கும் தோன்றியவன் வசவன். மாதரசன் மறையவன்; நல்லோன்; தக்கான். மாதாம்பிகை நல்லவள்; கற்பினள்; கயிலையிலிருந்து நந்தியே வசவனாக மாதாம்பிகை வயிற்றில் தோன்றினான். வசவன் பின்னர் உலகுக்கு நல்லறம் உரைத்து இறையருள் பெறுபவன். 'அவன் தோன்றியதால் மாதாம்பிகையின் பெருமை சொல்லுந்தரமன்று' எனக் கூறுமிடத்து சிவப்பிரகாச அடிகள் கூறிய வாக்கு பின் வருவது:—

பூங்கொடி யனமா தாம்பிகை பெருமை
புனைந்துரை யன்றுபட் டாங்கே
யோங்கிய வபர சிவனென வேதம்
உரைத்திடும் அருள்நந்தி வந்தான்
தாங்குற அவள்தன் வயிற்றிடை யதனால்
தக்கவர் தகவிலர் என்பது
ஆங்கவர் பயந்த புதல்வனால் தெளிய
அறிமின்என றறைகுவர் பெரியோர்.
(பிரபு. அக்கமாதேவி உற்பத்திகதி 20)

இப்பாட்டில் "தக்கவர் தகவிலர்... ... ...பெரியோர்" என்றவிடத்தில் எச்சம் என்பதற்குப் 'புதல்வன்' எனக் கொண்டதும் பெரியோர் என வள்ளுவரைக் கூறி, அவரும் 'எச்சம்' என்பதை 'மக்கள்' என்று கொண்டே அமைத்தார். ஆதலின் அதுவே அவ்விடத்துக் கொள்ளத் தக்கது என்பதே கருத்து என்று நமக்குத் தெரிவிக்கும் வகையில் கூறியதும் காண்க. எனவே, "தக்கார் தகவிலர் என்ற குறளில் வந்த 'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' என்று பொருள்கொள்வதே சிறக்கும் என்னலாம்.

இரங்கற்பா.

ச, சுந்தரேசன், புலவர் மாணவன், மயிலம்.

மன்னுதமிழ்க் கலைவளர்த்து மதியளிக்க
உருவெடுத்த மணியே யென்கோ!
தொன்னூல்கட் குரைதந்து தூய்செய்த
சுடரென்கோ! பதியே யென்கோ!
பன்னரிய நயங்கண்டு பாடுற்ற
அறிவென்கோ! அமுதே யென்கோ!
கன்னன்மொழி தருகரந்தைக் கவியரசே
கரந்தனையோ அந்தோ! அந்தோ!

"புகழ் வாழ்க தமிழேபோல்"

வித்துவான். சி. அரசப்பன், ஸர். சி. உயர்நிலைப்பள்ளி,
திருக்காட்டுப்பள்ளி.

1. அறிவியலும் அரசியலும் அருந்தமிழில் பிறர்உணர
அறிஞர்பலர் வியந்துரைக்க அன்பர்பலர் வாழ்த்துரைக்க
அறிவூறும் அறிவூற்றே! அருள்மலரும் அன்பூற்றே!
அறிவடக்கம் அறம்அன்பு நிறைந்தொளிரும் ஒளிவிளக்கே.
2. எளிமைக்கோர் நல்லுருவோய்! இனிமைநிறை நகைமுகத்தோய்!
அளித்தரும்நல் லுளமுடையோய் அன்புருவே நல்லறிஞ!
களிப்பருளும் களிப்புருவே! கவியரசே! கனிதமிழின்
ஒளிப்பிழம்பே! உம்முடைய புகழ்வாழ்க தமிழேபோல்!
3 தமிழ்மொழியும் தமிழ்நாடும் தக்காரும் இருக்கும்வரை
தமிழ்த்தேனின் சுவைமாந்தும் மொழித்தொண்டர் இருக்கும்வரை
தமிழர்தனின் அகவுணர்ச்சி தலைநிமிர்ந்து இருக்கும்வரை
தமிழ்ப்புலவர் தனித்தலைவர் நம்கவிஞர் புகழ்வாழும்.
4. நகைச்சுவையும் கருத்துணர்வும் நன்மைமிகு நிறையுளமும்
பகைகலக்கும் நுண்ணறிவும் பலர்போற்றும் கவிநோக்கும்
மிக்குடைய நல்லறிஞ! மேன்மைநிறை உயர்புலவ!
எக்குணமுக் நின்எளிமை எழில்தூய்மை தன்கலப்பே.
5. தன்முயற்சி தனைக்கொண்டே தானுயர்ந்தே ஆசானாய்
பன்மொழியில் உளநல்ல கருத்தெல்லாம் தனதாக்கித்
தன்மொழியின் உயர்விற்கே தன்காலம் முழுவதையும்
தன்னுடலின் ஆற்றலெல்லாம் தானீந்த பெரும்புலவ!
6. கருமைஉரு; வெண்மைப்பல்; நரைத்ததலை; குறைமீசை
கறையற்ற செம்மைமனம்; புன்சிரிப்பு எளிமைநிலை
பிறைகறுத்த பெருநெற்றி அதில்மணக்கும் நறுஞ்சாந்தம்
மறைவல்ல ஒளிமுகத்திற் கொப்புமையும் இலையன்றே!
7. வாழி நின்புகழ் வாழிபல் லாண்டென
எழிசை நல்லொலி எங்கும் நிறைந்திட.
வாழி தமிழகம் மாட்சி நிறைந்திட
வாழி நின்புகழ் வாழிபல் லூழியே!

தமிழின் பெருமை விளங்குவதெப்போது?

கோவை, கிழார்.

வாயு காதலனுக்குத் தன் பெருமை தனக்கே தெரியாதென்பர். அதுபோலவே தமிழ் மக்களுக்குத் தங்கள் பெருமை தங்களுக்கே தெரியாது என்பது மிகையல்ல. வாயு காதலனைப் போலவே தமிழ் மக்களுக்கும் பிறர் எடுத்து உரைத்துத்தான் பண்டைப் பெருமை அறிந்து கொள்ளவேண்டியிருக்கின்றது. பண்டைய ஏட்டுப் பிரதிகளைத் தவிர புதைபொருள் ஆராய்ச்சியும், கல்வெட்டு ஆராய்ச்சியும் தமிழ் மக்களுடைய பழமையை எடுத்துக் காட்டுகின்றன என்று பிறர் சொல்லிதான் தெரிய வேண்டி வந்தது. சிந்து நதி தீரத்திலும், அரிக்குமேட்டு மண்ணிலும் பண்டைத் தமிழர் வரலாறு புதைந்து கிடக்கிறதென்று ஆங்கில அறிஞர்கள் தான் முதல் முதலில் கூறினார்கள். அதனை அறிந்த பிறகாவது தமிழ் மக்கள் தொடர்ந்து வேலைசெய்ய வில்லை. பண்டைத்தலை நகரங்களாகிய உறையூர், பழையாறை, பூம்புகார், கொற்கை, வஞ்சி முதலிய இடங்களில் புதைந்து கிடக்கும் அரியபொருள்களை இன்னும் தோண்டிப் பார்க்க வில்லை. ஆகவே பண்டைய தமிழர் வரலாறு எவ்வாறு வெளிவரப் போகின்றது.

தங்களுடைய வரலாறு தமக்கே தெரியாவிட்டால் பிறர் அதனை எவ்வாறு அறிவார்கள்? அழுக்காறு படைத்தவர்கள் தங்களுக்கென ஒரு பெருமை தமிழர்களுக்கு இல்லை யென்றல்லவோ கூறுவார்கள். வட நாட்டார்கள் இந்தக் கூக்குரலில் சிறந்து விளங்குகிறார்கள். அண்மையிலே விசாகையில் கூடின இந்திய வரலாற்று மாநாட்டில் தலைமைவகித்த Dr. காலே என்ற வடதிசை ஆசிரியர் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றார். தமிழ் மக்கள் சிந்து நதி தீரத்தின் பண்டையக் குடிகள் என்று பெருமைப்படுத்தி பேசிக்கொள்வதில் யாதொரு ஆதாரமுமில்லையென்றும் தென்னாட்டு மொழிகளில் கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி எடுத்துக்காட்டக் கூடிய இலக்கியம் எதுவுமில்லை யென்றும், கல்வெட்டுக்களிலோ, நூல்களிலோ அக்காலத்திற்கு முந்திய செய்திகள் என்றும் காணப்படவில்லை யென்றும் எடுத்துரைத்தார். இவ்வாறு கூறியதற்கு காரணம் என்னவெனில் தமிழ்மொழியில் உள்ள தொல்காப்பியமும் சங்கத்து நூல்களும் அவர்கள் பார்வைக்கு எட்டாததுதான். இந் நூல்களைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஆராய்ச்சி உரைகள் எல்லாம் தமிழிலேயே இருக்கின்றன. வட நாட்டாருக்குத் தெரிந்த ஆங்கில மொழியில் இல்லை. தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதின சில எழுத்தாளர்களோ வடமொழிப்பற்று உடையவர்கள். அவர்கள் தமிழின் பண்டைப்பெருமையை குறைத்தே எழுதியிருக்கின்றார்கள். இந்தக் காரணத்தினால்தான் பெரிய மகாநாடுகளிலும் உண்மைக்கு மாறான பேச்சுகள் பேசப்படுகின்றன.

இந்தக் காலங்களில் வரலாற்று ஆராய்ச்சி மாநாடுகள் அடிக்கடி ஆங்காங்கே கூட்டப்படுகின்றன. அவைகளிலே தமிழ் ஆராய்ச்சி செய்யப்படவில்லை, தென்னாட்டு அறிஞர்கள் அவைகளில் கலந்து கொள்வதில்லை.

அறிஞர்கள் அங்கே செல்வதற்குப் போதுமான உதவியும் கிடைப்பதில்லை. பல்கலைக்கழகங்களோ, ஏனைய கழகங்களோ இந்த முயற்சியில் செம்மையாக ஈடுபடுவதில்லை. ஆகவே உண்மை எவ்வாறு வெளிவரும்.

தமிழ்மக்கள் தங்கள் பண்பாட்டைக் குறித்து இவ்வாறு பாராமுகமாயிருக்க, முன்னாளில் தென்னாட்டுமக்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை ஒரு சிறிது ஆராய்வோம். பண்டைக்காலம் தொடங்கி தங்கள் நாகரிகத்தைப் பிறநாடுகளுக்குகொண்டு செலுத்த வேண்டுமென்று தமிழ் மக்கள் முயன்றிருக்கின்றார்க்ள். அவ்வாறு முயன்றவர்களிலே கல்வி கற்ற புலவர்கள் மட்டுமன்றி அரசர்களும் போர்வீரர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். சில எடுத்துக்களைக் கூறுவோம்.

சங்கத்தார் காலத்தில் சேரர்களில் செங்குட்டுவனும், சோழர்களில் கரிகாலனும், பாண்டியர்களில் நெடுஞ்செழியனும், வடநாட்டிற்கு ஏகி வெற்றிபெற்று திரும்பினதை அறிவோம். பிறகு பல்லவர் காலத்தில் சிறுத்தொண்டரும், கலிப்பகையாரும் வடபுலத்தில் சென்று வாகை சூடினதை அறிவோம். அதற்குப்பிறகு சோழர் பேரரசுக் காலத்தில் இராஜராஜன், இராஜேந்திரன் முதலியோர்கள், வடபால் கங்கை வரைக்கும், கீழ்பால் கடல் தாண்டி கடாரம் வரைக்கும், தென்பால் கடலும், கானலும் தாண்டிப் புலனரிமட்டும், சென்று வென்றதை அறிவோம், குலோத்துங்கன் காலத்தில் கருணாகரத் தொண்டமான் கலிங்கத்தை வென்று கோதாவரிக்கரையில் இடக்காம்பையில் தமிழ்ச் செய்யுட் கல் வெட்டு பொறித்ததை அறிவோம். ஆகவே மன்னர்களும் படைத் தலைவர்களும் தமிழர் வீரத்தையும் பண்பாட்டையும் வடக்கும், கிழக்கும், தெற்கும், கொண்டு செலுத்தவில்லையா?

இனி தென்னாட்டுப் புலவர்களை எடுத்துப் பார்ப்போம். கிறிஸ்து பிறப்பதன் முன் 3, 4, நூற்றாண்டளவில் சாணக்கியர் என்ற தென்னாட்டு அறிஞர், வடநாட்டுச் சந்திரகுப்தனுக்கு அமைச்சனாயிருந்ததை அறிவோம். பல்லவர் காலத்தில் காஞ்சிபுரத்தில் கற்று அறிந்த தர்மபாலர் வடக்கே சென்று நாலந்தா பல்கலைக் கழகத்தில் தலைமை ஆசிரியராய் விளங்கினார். பிறகு அப்பரடிகள் கயிலை மட்டும் தமிழ் பாடிக் கொண்டு சென்றார். இடைக்காலத்தில் சங்கரரும், உடையவரும் வடகாசிக்கும், காஷ்மீரத்திற்கும் சென்றிருக்கின்றார்கள். மூன்று நூற்றாண்டின் முன் குமரகுருபர அடிகள் காசிக்குச் சென்று இந்தியை கற்றுக் கொண்டும் தமிழை வளர்த்தினார். இவ்வாறு நமது முன்னோர்கள் தமிழ்ப் பண்பாட்டை வடநாட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கத் தற்போது தமிழ் அறிஞர்கள் என்னசெய்கின்றார்கள்?

தமிழின் பெருமையை தாமும் ஆராய்வதில்லை. பிறர் அறியும்படி எடுத்துச் சொல்லுவதுமில்லை. 'வடநாட்டு அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்துதலின் பொருட்டுக் குறிஞ்சிப்பாட்டை அருளிச்செய்த கபிலர் போன்ற புலவர்கள் இனியாவது தோன்றமாட்டார்களா? அப்போதுதான் தமிழின் பெருமை நன்கு விளங்கும்.

துன்பப் பதிகம்.

[வித்துவான்: ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.]

1

கரந்தைக் கவியரசே! காவியஞ்சேர் சீரே!
அரந்தை சிறிதுமிலா ஆசான்!—திருஅரங்க,
வேங்கடாச லப்பெரியோய்! வீறுர் தமிழ்மகனே!
யாங் கொளித்தாய் ஏங்குகின்றேம் யாம்.

2

செப்பு மொழிதோறும் தேர்ந்த தொனிப்பொருளும்
தப்பில் நகைச்சுவையும் தான்றோன்ற—இப்புவியில்
உன்னையன்றி எங்கட் குரைப்பார்யார்? ஓங்குதமிழ்
அன்னையென யாரளிப்பார் அன்பு.

3

அகமகிழப் பாடி அணிவிளங்கப் பேசி
முகமலர்ந்து முத்தமிழைச் சொன்ன—தகவுடையீர்!
எங்ககன்றீர் நுங்கவியின் ஏர்நலத்தைக் கண்டமரர்
அங்கழைத்துக் கொண்டனரோ ஆய்ந்து.

4

தேனூர் தமிழ்அளித்த தெய்வத்தொல் காப்பியச்சொற்
கானூ உரைவகுத்த ஆன்றபுகழ்ச்—சேனா
வரையனுரை வார்த்துரைத்த வள்ளால்! நீ சென்றாய்
திருவுறையும் நம்பனடி தேர்ந்து.

5

அவ்வேங்க டாசலமும் ஆர்வேங்க டாசலமும்
செவ்வே புகழுயரத் தொத்தாலும்—வெவ்வேறே
மால்தாங்கும் அம்மலையோ, மால்நீக்கும் செந்தமிழாம்
நூல்தாங்கும் இம்மலையோ நோற்று.

6

காலன் உமைவிரும்பிக் கண்டங் கழைத்ததுன்றன்
சீலமிகு செந்தமிழைக் கேட்பதற்கோ ? —கோலமிகு
சங்கமுறு நூல்களுக்குத் தக்கஉரை காண்பதற்கோ ?
இங்குரைத்தல் வேண்டும் எமக்கு.

7

கொள்ளும் படியறியாய் கூற்றுவனென் றுன்பெயர்க்கிங்
கெள்ளளவும் சற்றும் இயைபில்லை—விள்ளரிய
தண்டமிழ்த்தாய் நன்மகனைத் தக்கோனைத் தன்மையின்றிக்
கொண்டொளித்தாய் காரணமென் கூறு.

8

தென்றிசையான் என்றுன்னைத் தேரா திருந்தேமால்
நன்றியிலாய் நீயும் நமனோ ? ஓ !—மன்றிசையச்
செந்தமிழ்த்தீந் தேம்பொழிந்த சீரார் கவியரசை
உந்திக்குள் ஏனொளித்தாய் ஓர்ந்து.

9

பாலறியாப் பாலே ! உன் பாலிருக்கும் தீங்கிற்கோர்
பால்வந்தப் பால்வலிமை பற்றுக,முப்—பால்கற்றன்
பால்விருந்தாய்த் தந்தபெரும் பாவலனை எம்முளம்வெப்
பால்வருந்தக் கொண்டனை நீ பாழ் !

10

தண்ணார் தமிழ்மொழியின் தன்மையறி நற்புலவ !
கண்ணார் கவிவரைந்த காட்சியனே !—பண்ணார்
நெடுந்தொகைக்கு நேயமுடன் நேருரைதந் தாய்யாம்
இடும்பைகொள ஏன்மறைந்தாய் இன்று ?

11

தேயப் பணிபுரிந்த செல்வன் ' திருவிக '
மேய தமிழ்ப்பூ வராகனுடன்—தாயபுகழ்ப்
பண்டிதமா நன்மணியும் பார்க்க அழைத்தனரோ
ஒண்டமிழ் சேர் ' ஆர்வி ' உனை.

என் மனம் கவர் கவிஞர்.

T. A. R. சுப்புலட்சுமி, I. U. C.,
Holycross College, Trichy.

" நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டம் "

இதுதான் நமது அருமைத் தாயகம் அறிவாற்றல் சிறந்த பாரத நாடு. இத் தனிப்பெரும் நாட்டிலே அகிலமெலாம் போற்றும் உயர் கற்பனைக் காவியம் உலகினுக்கீந்த கம்பனின் வரலாறும், அவனிக்கெல்லாம் அருமறை சாற்றிய தெய்வத் திருவள்ளுவரின் வரலாறும் கற்பனை உலகிலே கூடக் காணற்கரிய எண்ணிறந்த கட்டுக்கதைகளினிடையே சிக்கிச் சின்னாபின்னமாயின. தேசப்பற்று கொழுந்து விட்டெரிந்து, தென்குமரி முதலாக இமயம் ஈருகக் கல்வி வளம் பெருகிப் பழம் பெருமை சிறந்திருந்த பாரத நாடு ஒளியிழந்து, கவினழிந்து, சோர்வுற்று, மக்கள் பள்ளத்திலே வீழ்ந்திருக்கும் குருடர்கள் போல் இருந்த காலத்தில் தான் தேசிய கீதங்களால் உரிமை உணர்ச்சியை உண்டாக்கி, உறங்கிக்கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பிய கவிதையால் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட வாகவிபாரதியார் பிறந்து வளர்ந்து உருவாகி வந்தார்.

வெளிப்பூச்சான கற்பனைகள், பல்லாயிரக்கணக்கான மக்கள் அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை, பயமும், வீரமும் பக்கத்திலே கொலு வீற்றிருந்த தன்மை, பயமும், பக்தியும் பாசறை கொண்டிருந்த காட்சிகள் அனைத்தின் உறைவிடமாகத் திகழ்ந்ததுதான் இந்நாடு. அடிமை இருளிலே கண்ணற்றுக் குருடராகப் பாரத நாட்டின் புதல்வர்கள் நேற்று வாணிகம் செய்ய வந்தவருக்குக் கை கட்டி, வாய் பொத்திப் பல் காட்டி அக்ரமங்களுக்கு நிலைக்களனுய்ச் சேவகம் செய்த அதே தருணத்தில்தான் நமது அருங்கவி, இருளிடையே ஆதவன் உதித்தாற்போன்றும், அக்ரமங்களால் சிறந்து விளங்கிய ஆங்கில ஆட்சியாளருக்குச் சாவுமணி அடித்தாற்போன்றும் தோன்றி அஞ்சாமையை ஊட்டி, அறிவொளியைப் பரப்பித் தமிழகத்தின் பெருமையை அவனியெல்லாம் நன்குணர்ந்துய்யுமாறு மக்களுக்காக மக்கள் மனத்துள் உறையும் எண்ணத்துடிப்புக்களை, சிந்தனையால் பீறிடும் சீரிய கருத்துக்களைச் செஞ்சொற் சித்திரங்களாகத் தீட்டி மகிழ்வித்தார். தமிழ் மொழிக்குப் புத்துணர்வும், தமிழருக்குப் புத்துயிரும், புது வாழ்வும் தந்து தனது கவிதைகளைத் தமிழ் நாடு முழுதும் பரப்பினர். ஏன் ! பரப்பினர் என்று கூறுவதைவிட அவரது கவிதைமனம் தானுகவே தமிழ் நாடு முழுவதும் பரவியது எனக் கூறுவது மிகையாகாது. பாரதியாருக்கு முன்னிருந்த புலவர்களெல்லாம் சொந்த நாட்டை விட்டு விட்டு மேக மண்டலத்தில் எங்கோ உள்ள, நினைத்தற்கும், காணற்கும் அரிய சுவர்க்க பூமியன் கவினைப்பற்றிக் கவிதை இயற்றினர். மக்கள் அவற்றைக் கருத்திற்காக அல்ல, கலை நயத்திற்காகப் பாராட்டினர்.

எண்ணற்ற கடிமலர்கள் நறுமணம் நல்கும் கோடையிலே களைப் பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் பூங்காவிலே மயில்கண்டன்ன மடைநடை பொருந்திய ஆரணங்கு உலவிக்கொண்டிருக்கிறாள். கூனிக் குறுகியவளாய், அல்லல்களுக்கெல்லாம் நிலைக்களனுயுள்ள திரைந்த முகத்தினை யுடையவளாய் ஒரு வயோதிக மாது எதிர்ப்படுகிறாள். முதிய பிராட்டியின் அவல நிலையைக் கண்ணுற்ற செல்வியின் உள்ளம் பதை பதைக்கிறது. "பாட்டி! இவ்வவல நிலையை நீங்கள் ஏன் எய்தினீர்கள்? உங்கள் மன வருத்தத்திற்குக் காரணம் யாது", எனத் தனது குயிலினுமினிய மழலை மொழியில் வினவுகிறாள். முதிய மங்கை, "அணங்கே! எனது அருமையான தவப்புதல்வர்கள் ஆயிரமாயிரமாகக் கைகளிலே அடிமை விலங்கு பூண்டுக் கதியற்றுத் தவிக்கின்றனரே! அவரது துன்பக் கண்ணீரைத் துடைப்போர் இல்லையோ? "எனக் குருதிநீர் சிந்துகிறாள். அவ்வளவில் நங்கையின் நீலக்கண்கள் கொழுந்து விட்டெரிந்தன. நரம்புகள் துடித்தன. "அருமைத்தாயின் அடிமைத் தளையைக் கட்டெறியாமல் விடேன்", எனச் சபதம் செய்கிறாள். அவ்வரிய ஆரணங்கு வேறு யாருமில்லை. நம் அருந்தமிழ்த்தாய் தான். அவளது மொழியை உறுதிசெய்த பல தவப்புதல்வர்களிடையே ஒருவர்தாம் நமது தென்னாட்டுக் கவிஞர் பாரதியார்.

பாரதியார் தேசீயக் கவிஞர் மட்டுமல்லர். சீர்திருத்த வானிலே தோன்றி மின்னும் விடிவெள்ளி. அவர் தந்நாடு அடிமைத் தளையினின்றும் விடுபெறவேண்டும் என்று, பிறநாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டத்தைக் கவிதைகளாக்கி அளித்தார். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்னும் "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்னும் அவர் பாடிய பாடல்கள் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

நாட்டுப் பற்றை ஊட்டக்கூடிய பாக்கள் ஒரு சிறிதும் இல்லாத காலம், பத்தாம் பசலிக் கருத்துக்களையும், மூட நம்பிக்கைகளையும் உண்டாக்கும் குருட்டுக் கொள்கைகளையும் பாடிக்குவித்த காலம். இவ்வாறு இருண்டிருந்த கவிதை உலகிலே பேரொளி வீசியது பாரதியின் தெவிட்டா இன்பம் படைத்த கவிதை. அவர் சங்ககாலக் கவிதை சிந்தாமணி, கம்பனது இராமாயணம் இவற்றின் சுவையையும் பிழிந்து இக் காலத்திற் கேற்றவாறு இனிமை பெய்யும் கவிதைகளாக்கித் தந்தார். கவிதை உலகிலே புத்துயிரை உண்டாக்கிப் புதுமை பூக்கச் செய்தார். படியாத பாமரருக்கும் அவர் கவிதை இடமளித்தது.

பாரதி நமது எண்ணங்களை நன்றாக மனத்திற் கொண்டு, தாய் மொழிப் பற்றுக்கொண்ட ஆர்வத்தால் உண்மையான கவி விளைவிக்கும் ஒப்பற்ற இன்பத்தை உண்டாக்கித் தரும்படியான செய்யுட்களாக அமைத்தார். அவரது நோக்கம் சாதாரண மக்களின் உள்ளங்களைக் கொண்டு உயர்ந்த கருத்துக்களை மனத்திற் பதித்து உணர்ச்சியைத் தட்டி

எழுப்பவேண்டும் என்பதேயன்றி வேறொன்றுமில்லை. அத்தகைய ஆற்றல் அவரிடம் நிறைந்திருந்தது. ஆக அவர் இசைக்குவேண்டிய விதி முறைகளைப் பொருட்படுத்தாமல் தனது லட்சியத்திற்கே பாக்கள் அமைக்கப் பாடுபட்டார். எத்தகைய விதமாக அவர் பாடினும் அவை அழகாக அமைகின்றன. அவர் தமது பாக்களில் எளிமை, இனிமை இசை முதலியவற்றைப் புகுத்தி நம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றார்.

"வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மாவே வாழ்க."

இப் பாடலில் எளிமையும் இனிமையும் அடங்கியுள்ளன என இயம்புதல் சர்க்கரை தித்திக்கின்றது, தேன் இனிக்கிறது எனக் கூறுவது போல் ஆகுமன்றோ? இதன் பொருளை விளக்க ஒரு போகாதியோ, பேராசிரியரோ தேவையில்லை. ஆ! அப்பா, அத்தனை இனிமையாக உள்ளது. அரைக்க, அரைக்கச் சந்தனம் மணப்பது போல, உரைக்க, உரைக்கப் பொன் மாற்றுக் குறையாதது போல அவரது பாடல் படிக்கப் படிக்கச் சுவை குன்றாது தெவிட்டாக் கனியென இசையோடு மிளிர்கின்றது.

கல்வியின் ஊற்றாய், அறிவின் சிகரமாய், நாகரீகத்தின் தோற்றவாய்ப் பிரகாசித்த நம் நாடு அறியாமையில் மூழ்கி அண்டவந்த கூட்டத்தினரிடையே அடிமைப்பட்டு அல்லலுற்றுச் சிக்கிச் சீரழிந்து மாற்றானிடம் மண்டியிட்டிருப்பதைக் கண்டு மனம் புழுங்கினார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே!
இந்த நிலை கெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்."

என்ற அடிகள் அவரது உள்ளக் குமுறலை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர் விடுதலை உணர்ச்சி என்னும் நல் வித்தினை மக்கள் உளமென்னும் நிலத்தில் தூவி விடுதலை வேட்கை யென்னும் செடியைப் பயிரிட்டார். செடி செழித்து வளர்ந்து மரமாகிவிட்டது. மண்டியிட்டிருந்த மாக்கள் தலை நிமிர்ந்து நடக்கும் மக்கள் ஆவதைக் காண்கின்றோம். பாரதியார் பூனை போன்றிருந்த மக்களைப் புலியாக்கினார். தாழ்ந்த தமிழகத்தைத் தட்டி யெழுப்பினார்.

"ஒருவன் உழைத்து வாழ, மற்றொருவன் உழையாதுண்ண, ஒருவன் இருந்துண்ண, மற்றொருவன் இரந்தே உண்ண, ஒருவன் மக்களை அடக்கி ஆள்பவனாக இருக்க, மற்றொருவன் அவனது அடிமையாயிருக்க—இவற்றினையா உண்மையில் இறைவன் படைத்தான்?" என்று கேட்கிறார். பெண்களை அடிமை எனக் கருதி "அடுப்பூதும் பெண்களிற்குக்

கல்வி எதற்கு?" என்ற எதுகை, மோனை நயத்துடன் கூடிய இடைக் காலப் பழமொழியை ஒலித்து வீர முழக்கம் செய்த வெற்றி தீரர்களை அவர் அடியோடு வெறுத்தார். காண்டிப் பிடித்த கை பேனா பிடிப்பதைக் கண்டதும் அவர்கள் மனத்தில் கதறும், பொறாமையும் தோன்றுவது இயல்புதானே? பல கோழை ஆண்கள் போர் புரிதற்கு அஞ்சி ஒளிந்திருந்த அதே காலத்தில் ஜான்ஸி ராணி லட்சுமிபாய், ராணி தூர்க்கபாய், ராணி அகல்யா முதலியோர் ஆற்றலுடனும், வீரத்துடனும் சமர் புரிந்த தீரச் செயல்களை அக் கசடர்கள் மறந்து விட்டாலும் அமரகவி மறந்துவிடவில்லை. அவர் பெண்கள் பொறுமையின் வடிவமென்றும், அவனியாளும் ஆற்றல் படைத்தவர்களென்றும் வெற்றிக்கொடி நாட்டிச் சங்கநாதம் முழக்குகின்றார்.

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி,"

என்று பறை சாற்றுகின்றார்.

பெண்கள் கல்வி பயின்றால் அவர்கள் ஒழுக்கத்தினின்றும் தவறி விடுவார்களே என்ற மூடர்களின் வினாவிற்கு,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்,"

என ஆணித்தரமாக அவர் விடையிறுக்கிறார். மேலும் அவர் கற்பனையில் உதித்த புதுமைப் பெண்ணைப்பற்றி அறிவோம்:—

"சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்
காத்து மானிடச் செய்கை அனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்,
ஏத்தி யாடவர் போற்றி—வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ?"

இவ்வாறு பாரதியார் கண்ட புதுமைப் பெண்டிர் பலர் நம் நாட்டில் இருப்பரேல் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு யாதொரு தடையுமில்லை ஒன்றே கூறலாம். எனவே நம் நாட்டுப் பெண்டிர் அவர் கூறிய வழி நடந்து புகழேணியின் உச்சிப்படியிலே, கோபுரத்தின் உச்சித் தீபமாக இலங்க முன்வரவேண்டும். எனவே பாரதியார் மறுமலர்ச்சி வானிலே தோன்றிய விடிவெள்ளி. அவர் குவிந்த மலரைக் குவலயத்தில் மலரச் செய்து குன்றாப் புகழ்பெற்றார்.

புரட்சிக் கவிஞராகிய அவர், அடிமைத் தன்மையை எதிர்த்து ஆர்த்தெழுந்த மக்களுக்கு ஆங்கிலேயர் அளித்த அல்லல்களையும், கடலிலே கலம் செலுத்திய மறத் தமிழர் சிதம்பரனார் செக்கிழுக்கப்பட்டதையும் கீழ்க்கண்ட அடியில் கூறி அடிமைத்தளையை அறுத்தெறிய மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறார்.

"மேலோர்கள் வெஞ்சிறையில் கிடப்பதும்
நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ."

என இந்தியரின் இழி நிலையைத் தக்க காலத்தில் மக்கள் மனத்தில் பதியும்படியான எளிய நடையில் எடுத்தியம்புகிறார். இங்ஙனம் மடமையிருள் நிறைந்திருந்த தமிழகத்திலே பெருஞ் சுடரெனப் புரட்சி ஒளியாய்த் திகழ்ந்தார். சமுதாயப் பிரிவினால் சரிந்து கிடந்த தமிழ்த்தாயைச் சரிசெய்யத் துணிந்தார். அவர் காலம், மடமையைத் தோழமையாகக் கொண்ட மக்கள், மானம் சிறிதென எண்ணி, வாழ்வு பெரிதென எண்ணும் மக்கள், கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்ற மக்கள் அவரைக் குலத்துரோகி யென்றும், நாசக்காரன் என்றும் பறை சாற்றினர். ஆனால் அவர் அவ்வவதூறுகளை யெல்லாம் கடந்து தமது கொள்கையில் வெற்றி பெற்றார். வெள்ளத்தின் பெருக்கினைப்போல் கலைப் பெருக்கும் நிறைந்திருந்த அவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதா வதெங்கும் காணோம்," என்றும், "மறைவாக நமக்குள்ளே பழம் கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை" என்றும் கூறுகின்றார். அவர் உலகத்தாரின் உள்ளத்தில் சுத்த இரத்தம் ஓடப்பண்ணி மாந்தர் வாழ்வை அமர வாழ்வாக்க வேண்டுமென்றும், தாம் கனவுலகத்தில் காணும் புது உலகத்தில் நம் மூடக்கட்டுகள் யாவும் தகர்ப்போம் என்று சபதம் செய்து கொள்ளவேண்டுமென்றும் விரும்புறார்.

வால்டேர், ரூஸே இவர்களின் புதிய எண்ணங்கள் எங்ஙனம் அடிமைக் கோட்டையினைத் தகர்த்தனவோ, மாஜினியின் வீரவாக்குகள் எங்ஙனம் இத்தாலிக்குப் புத்துயிரும் புதுநலனும் அளித்தனவோ அது போல் அமரகவி பாரதியின் பாடல் உறங்கிக் கிடந்த தமிழரைத் தட்டியெழுப்பி, தமிழ் நாட்டை விழிப்புறச் செய்து, மொழிப் பற்றற்று இருந்த தமிழ் மக்களுக்குத் தாய்மொழி மீதும், தமிழ் நாட்டின் மீதும் உண்மைப்

பற்றுக் கொள்ளச்செய்து வீதியெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்து விட்டது என்பது உறுதியான முழுமதிபோல் அவரது பாடல்கள் கவின் பெற்று விளங்குகின்றன.

பாரதியார் கவிஞர் மட்டுமல்லர். பெரும் தீர்க்க தரிசியுமாவார். ,, கத்தியின்றி ரத்தமின்றி வரும் யுத்தத்தில்,'' இந்தியர் வெற்றிபெறுவர் என்பதை அவர் முன்னுடியாவவே கண்டு கூறியுள்ளார்.

"தனியொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று முழக்கம் செய்த அவர் இன்று கோடிக்கணக்கான மக்கள்

"நெருப்பினுள் துஞ்சலு மாகும் நிறப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க வறுமையில் அல்லல் படுவதைக் கண்டிருப்பரே யெனில் தனது கவிதையால் இவ் வுலகத்தையே அழித்திருப்பர்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த வரகவியார் "என் உளம் கவர் கவிஞர்" மாத்திரமல்லர். அனைவரது உள்ளத்தையும் கவர் கவிஞர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்குணரப்படுகின்ற தன்றே? அவர் காட்டிய ஒழுக்க நெறியில் சிறந்து நடந்து அமர வாழ்வு அடைய வேண்டியது தமிழகத்தின் தவப் புதல்வர்களாகிய நமது கடமையாகும். நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் பாரதி கண்ட நெறியில் தவறாது ஒழுகி உயர் திருமதி விஜயலட்சுமி பண்டிட், இசைக்குயில் சரோஜினி தேவி முதலிய பெண்மணிகளைப்போன்று பல்வகைக் கலைகளிலும் தேர்ச்சியுற்று நாட்டு நலகிற்காகப் பாடு படுவரேல் நம் நாடு

"நீராரும கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும வதனமெனத் திகழு"மென்பதில்
ஐயம் சற்றுமில்லை.

வாழ்க பாரதி யுகம்!
வாழ்க அவர் புகழ்!!
வாழ்க அருந்தமிழ்ச் சங்கம்!!!

கவியரசரின் நகைச் சுவை.

சி. நடராசன், IV U. C.
கரந்தைப் புலவர் கல்லூரி.

"தமிழ் மொழியை நான் ஊன்றிப் படித்தேன். படிக்கப் படிக்க அம்மொழியிலுள்ள அழகு அதிகமாகத் தெரிந்தது. மிகச் செம்மையானதும் அமிழ்தம் போன்றதுமான மொழி. அம்மொழியைப் படித்ததிலிருந்து நான் தெரிந்து கொண்டது, தமிழ்மொழி சிறந்த அறிஞர்களால் ஆக்கப்பட்ட உயர்ந்தமொழி; அம்மொழியின் அமைப்பும் பண்பட்ட அறிஞர்களையும் நிபுணர்களையும் தோற்றுவிக்கும் ஆற்றல் அமைந்தது என்பவையாகும். எனவே சென்னைக்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ் மொழியைத் தெரிந்துகொள்ள வேண்டும்.'' இவ்வாறு "மாடர்ன் ரிவியூ" என்ற நாளிதழில் காந்தியடிகள் எழுதியிருந்தார். அடிகள் கூறியது போலவே கல்வியிற் சிறந்த பெருமக்கள் பலர் நம் தமிழ் நாட்டில் அன்றும் இன்றும், என்றுமே இருந்தனர்; இருந்து வருகிறார்கள் என்பதை நூல்கள் வாயிலாகவும் கண்கூடாகவும் நாம் அறிந்து வருகிறோம். அண்மையில் வாழ்ந்து மறைந்த அருந் தமிழ்ப் புலவர்களில் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவராவர்.

இறுதிநேரம் வரைத் தமிழ்த் தொண்டாற்றிய கவியரசரவர்கள் நூலாசிரியரும், உரையாசிரியரும் செய்யுளியற்றுதலில் வல்லுநருமாவர். அவர்கள் இயற்றிய செய்யுட்கள் யாவும் சிலேடை அணி நயம் மிகுந்து கேட்போர்க்குத் தணியா இன்பம் பயப்பனவாகும். கடமை உணர்ந்த ஆசிரியர்கள் குறைந்துள்ள இக்காலத்திலே ஆசிரியர்கள் எவ்வாறு பாடம் சொல்லவேண்டும் என்பதற்கு அவர்கள் எடுத்துக் காட்டாக இருந்தார்கள். எண்பொருளவாகச் செலச் சொல்லும் ஆற்றல் அவர்களிடம் இயல்பாகவே அமைந்துகிடந்தது.

இலக்கணப் பாடங்களை நுண்ணுணர்வு குறைந்த மாணவர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய முறையில் பாடம் சொல்லுவதில் அவருக்கு நிகர் அவரேதான். இவற்றை யெல்லாம்விட சிறப்பாக அவர்களிடம் அமைந்து கிடந்த ஆற்றல் எந்தச் சூழ்நிலையிலும் நகைச்சுவை அமையப் பேசுதலாகும். இடுக்கண் வருங்கால் நகுக என்ற குறளுக்கு இலக்கியமாக இருந்தார். மரணப் படுக்கையில்கூட நகைச்சுவை அமையப் பேசித் தன்னைப் பார்க்க வந்தவர்களை மகிழ்விக்கும் ஆற்றல் அவர்களிடம் மன்னியிருந்தது. அவர்களது எச்சமாகிய நகைச்சுவைக் குறிப்புக்கள் சிலவற்றைத் தொகுத்து எழுதுவதே ஈண்டு எமது நோக்கமாகும்.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்." (குறள் 114)

"தமிழ் மொழியைத் தெரிந்து கொண்டவர்கள் தன்னை அம்மொழிக்கு அடிமையாக்கி அம்மொழியே நாடெல்லாம் பரவ வேண்டுமென்று விரும்புவார்கள் என்பது யாம் அறுதியிட்டுக் கூறக் கூடிய உண்மையாகும்" என்று செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் கூறினார்கள். அவர்கள் கூற்றை உண்மையாக்கியவர்களுள் கவியரசரும் ஒருவராவார்.

குடும்பம்

அவர் தன் மனைவியைப்பற்றிக் கூறும்போது நான் முகமதியப்பெண்ணை மணந்து கொண்டேன் என்று கூறுவார். அதைக் கேட்டவர்கள், இவர் இந்துவாக இருக்கிறாரே? எவ்வாறு முகம்மதியப்பெண்ணை மணந்து கொண்டார்? ஏன் மணந்துகொண்டார்? என்று பல வியப்புக் குறிகள் முகத்திலே தோன்ற அவர் முகத்தைப் பார்ப்பார்கள். அவர்கள் மனப் போராட்டத்தை உணர்ந்த அவர், உடனே "முகம்மதி போன்ற பெண்" என்பார். கேட்டவர்கள் தாங்கள் எண்ணியதையும் அவர் சொல் நயத்தையும் எண்ணி விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

கவியரசருக்கு ஒரு மகன் உண்டு. மகனுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தபோது ஒருசமயம் அது குறித்து நண்பர்களிடையே பேச்சு எழுந்தது. கவியரசர் "சு. ம. திருமணமாகச்" செய்ய எண்ணியுள்ளேன் என்று கூறினார்கள். நண்பரொருவர் இடைமறித்து ஏன் அவ்வாறு செய்ய எண்ணினீர்கள் என்று வினவினார். அதற்கு அவர், இரண்டுபேருக்கும் (மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும்) அதுதான் விருப்பமாக இருக்கிறது என்று கூறினார். நண்பர்கள் சு. ம. திருமணம் என்பதைச் "சுயமரியாதைத் திருமணம்' என்று எண்ணிக்கொண்டார்கள். திருமணம் முடிந்தது. நண்பர்கள் எதிர்பார்த்தபடி ஒன்றும் அங்கு நடைபெறவில்லை. சிறிது ஏமாற்றமடைந்த நண்பர்கள் கவியரசரைக் கண்டு கேட்டார்கள். நான் கூறியபடி சு. ம. திருமணமாகத்தானே நடந்தது என்றார். நண்பர்கள் சிறிது தடுமாற்ற மடைந்தார்கள். மீண்டும் இங்கு திருமணம் சுப்பிரமணியனுக்கும் (மாப்பிள்ளை பெயர்) மங்கயர்க்கரசிக்கும் (பெண்ணின்பெயர்) தானே நடந்தது என்றார். அங்கிருந்த அனைவரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். அப்பொழுது ஒரு நண்பர், முன்பு எங்களிடம் "இரண்டுபேருக்கும் அதுதான் விருப்பம்" என்று கூறினீர்களே என்று வினவ, ஆமாம் சுப்பிரமணியனுக்கு மங்கையர்க் கரசியைத்தான் விருப்பம்; மங்கையர்க்கரசிக்கும் சுப்பிரமணியன் மேல்தான் விருப்பம் என்றார். இதைக் கேட்ட நண்பர்கள் யாவரும் இதனை எண்ணி எண்ணி இன்றும் சிரித்து மகிழ்வதுண்டு.

குலம்

கவியரசர் யாதவகுலப் பெருமகனார் என்பதை எல்லோரும் அறிவர். அவர் தன் சாதி உயர்ந்தது என்றும் ஏனைச் சாதிகள் இழிந்தன என்றும் கருதும் இயல்புடையரல்லர். தன் சாதியார்களிடம் கண்ட குறையையும் தானே நயம்பட எடுத்துக் கூறித்தான் மகிழ்வதோடு பிறரையும் மகிழச்செய்வார். தன் மனதில் பட்ட கருத்துக்களை எந்த

இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் அஞ்சாது கூறும் இயல்புடையார். "இடையன் தடிக்கம்பு எடுத்ததுபோல" என்ற தொடர் மொழிகளுக்கு அவர் நயம்பட விளக்கம் கூறுவார்.

இடையன் ஒருவன் தன் வீட்டிலுள்ள எருமைகளை மேய்த்துக் கொண்டு மாலையில் வீடு திரும்பினான். வரும் பொழுது தன் நீண்ட தடிக்கம்பினை பிடரியில் வைத்துக் கொண்டு தன் இரு கைகளையும் தோளின் மேலே கொடுத்து அக் கம்பினை இறுகப் பிடித்துக்கொண்டுவந்தான். வந்தவன் வந்தபடியே வாயிலுக்குள் நுழைந்தான். பிடரியில் கம்பு இருந்ததால் உள்ளே செல்ல இயலவில்லை. இதையறியாது பலதடவை அவன் முயன்று பார்த்தான் முடியவில்லை. அப்பொழுது நீண்ட கொம்புகளையுடைய எருமை யொன்று அடுத்த வாயில் வழியாக உள்ளே நுழைவதைக் கண்டான். அவ் வெருமையின் கொம்புகள் விரிந்திருந்தமையால் அது ஒரு பக்கமாகச் சாய்த்துக்கொண்டு உள்ளே நுழைந்து விட்டது. அதனைக்கண்ட இடையன் எருமையின் அறிவைக் கண்டு மகிழ்ந்து பின்னர்த்தானும் அதுபோலத் தடிக்கம்பைச் சாய்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் உணவுகொள்ள உட்கார்ந்தான். அவன் மனைவி இலையைப் போட்டுச் சோற்றினைப் படைக்க எண்ணினாள். உடனே அவன் அடியே! இந்தச் சோற்றினை எருமைக்குக் கொண்டு போடு. எருமைக்குரிய வைக்கோலைக் கொண்டுவா அதைத் தான் இன்று நான் உண்ணவேண்டும்; எருமை இன்று எனக்கு ஒரு நல்ல பாடம் கற்பித்துத் தந்தது என்று சொல்லி நடந்ததைக் கூறினானாம். அதுமுதல் "இடையன் தடிக்கம்பு எடுத்ததுபோல" என்ற தொடர்மொழி வழங்குவதாயிற்று என்று கூறுவார். "இடையன்புத்தி பிடரியிலே" என்ற தொடர்மொழிக்கும் இதுபோலவே நயம்பட விளக்கம் கூறுவார்.

நாட்டுப்புறத்திலுள்ள ஆயர்களும், ஆய்ச்சியர்களும் கூறும் தொடர் மொழிகளில் அமைந்து கிடக்கும் இரு

பொருள்படும் கருத்துக்களை அகப்பொருள் சுவைபட நயமாக எடுத்துக் கூறுவதிலும் இவர் மிக வல்லுநர். அவற்றை எழுதிக் காட்டுவதானால் அவற்றிலுள்ள அகப்பொருட் சுவைகளை உள்ளவாறே உணரமுடியாது. அவற்றினை அறிந்தார் மாட்டுத் தெரிந்து மகிழ்க.

இரு புலவர்கள்

அருளப்பன் என்னும் புலவர் ஒருநாள் தன் நண்பன் புலவர் மணிவண்ணனை விருந்திற்கு அழைத்தார். விருந்து சிறப்பாக நடைபெற்றது. விருந்து முடிந்து இருவரும் ஓரிடத்தில் அமர்ந்தபின் அருளப்பன் தன் மனைவியை அழைத்து "ஐயா உண்ட இடத்தில் சாணி தடவு" என்றார். (உண்ட இடம் இங்கு·இரு பொருள்பட அமைந்துள்ளது) குறிப்பை உணர்ந்த மணிவண்ணன் விரைவாக "சொன்ன இடத்தில் தடவுங்கள்" என்றார். இவ்வாறு புலவர்கள் நயம்படக் கூறிக் கொள்வார்கள் என்று அவர் மிக நயமாக எடுத்துக் கூறுவார்.

தேங்காய்

திருமண இல்லங்களில் வந்தவர்களை வரவேற்று சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலியன கொடுப்பார்கள். சில இடங்களிலே தேங்காயும் சேர்த்துக் கொடுப்பதுண்டு. திருமண வீட்டில் தேங்காய் கொடுத்து விட்டால் சென்றவர்கள் அதை வாங்கிக்கொண்டு உடனே வந்துவிட வேண்டும். நண்பகல் உணவுக்காக அங்கு காத்திருக்கக் கூடாது. இதை நேரில் கூறுவது நாகரிகமல்ல என்று கருதியே திருமண வீட்டார் தேங்காயைக் கொடுத்து தேங்காய் (தேங்காய்: இங்குத் தங்காதே) என்று மறைமுகமாகக் கூறுகிறார்களாம் என்று கூறுவார் அவர்.

சூட்டுப் போடுதல்

ஒரு சமயம் நமது கவியரசரிடம் ஏறக்குறைய அறுபது வயது நிரம்பிய ஒருவர் வந்து "என்னுங்க நமது விடாக் கண்டன் வருடம் இரண்டாகியும் இன்னமும் பணம் தா

வில்லை; அதற்காக நான் குட்டைப் போடப் போகிறேன்" என்று கூறினார். உடனே கவியரசர் "நீங்கள் இவ்வளவு வயதுக்குப் பிறகு குட்டைப் போட்டால் அழகாக இருக்காது; மேலும் பணமும் அதிகமாகச் செலவாகும்" என்றார் (குட்டு இங்கு இரு பொருளில் அமைந்துள்ளது) பக்கத்தில் நின்ற மாணவர்கள் கொல்லென்று சிரித்து விட்டார்கள். மாணவர்கள் சிரிப்புக்குக் காரணம் என்னவென்று அறியாத முதியவர் "இஞ்சிதின்ற மந்திபோல" திரு திருவென்று விழித்தார்.

அச்சுக்கூடம்

அச்சுக்கூடம் ஒன்றிலே முருகையன் என்பவர் அலுவல் பார்த்துவந்தார். அவர் அடிக்கடி வெளியே எழுந்து செல்வார். அச்சுக்கூட உரிமையாளர் எங்கேயப்பா செல்கிறாய் என்று கேட்டால் அவர் "காரியமாக"ச் செல்கிறேன் என்று கூறுவது வழக்கம். ஒருசமயம் உரிமையாளர் அச்சுக்கூட வரவு செலவு கணக்கைப் பரிசோதித்தார். அப்பொழுது அங்கிருந்த காரீயம் முழுவதும் காணவில்லை. உடனே முருகையனை அழைத்துக் கேட்டார். அவர் நான்தான் எடுத்துச் சென்றேன் என்று கூறினார். உரிமையாளர் ஏன் என்னிடம் கேட்காமல் எடுத்துச் சென்றாய் என்று கோபமாகக் கேட்டார். முருகையன் பரபரப்படையாமல் தங்களிடம் சொல்லிக் கொண்டேதான் எடுத்துச் சென்றேன்; நான் அடிக்கடி வெளியே போகும் போதெல்லாம் தாங்கள் எங்கே செல்கிறாய் என்று கேட்பீர்கள்; அப்பொழுது நான் "காரீயமாக"ச் செல்கிறேன் என்று கூறுவதுண்டு. நான் போகும் போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் காரீயத்தை எடுத்துச் சென்றேன்; இப்பொழுது தீர்ந்துவிட்டது என்று கூறினான். இவ்வாறு நகைச்சுவைபடக் கற்பனைக் கதைகள் பல அவர் கூறுவதுண்டு.

பந்தலிலே பாகற்காய்

உறவினர்கள் இறந்து விட்டால் பெண்கள் அங்குச் சென்று அழுவதுண்டு. அழும்போது அவர்கள் பலவிதமான

பாடல்களும் பாடுவதுண்டு. அவ்வாறு அழுகின்ற பெண்கள் இறந்தவர்களுக்காகவே உண்மையாக அழுகிறார்களா? இதனைக் கவியரசர் மிக வேடிக்கையாகக் கூறுவார். உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். இரண்டு பெண்கள் அங்குச் சென்றார்கள். அந்த வீட்டின் முற்றத்தில் பாகற்காய் பந்தல் ஒன்று படர்ந்திருந்தது. காய்கள் காய்த்துத் தொங்கின. இதை அப் பெண்கள் போகும்போதே பார்த்துக்கொண்டு சென்றார்கள். கூட்டத்தோடு சேர்ந்து அழ ஆரம்பித்தார்கள். அழுகையினிடையே ஒருபெண் "பந்தலிலே பாகற்காய்" என்ன அடுத்தபெண் 'போகையிலே பார்த்துக்கொள்வோம். என்றாள். இவ்விருவர் உரையாடலையும் அழுகையோடு அழுகையாய் கவனித்துக் கொண்டிருந்த வீட்டுச் சொந்தக்காரி—இறந்தவரின் மனைவி விரைவாக "ஐயய்யோ! விதைக்கல்லோ போட்டிருக்கேன்" என்று அழுது கூறினாள். இவ்வாறு பல நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து நகைச்சுவை படக் கூறுவதில் மிக வன்மை பெற்றிருந்தார் கவியரசர்.

ஓட்டலில் நடந்தவை

நாகமணி பாலக்காடு சென்றிருந்தான். ஒரு ஓட்டலில் சிற்றுண்டி அருந்த நுழைந்தான். பலகாரங்கள் உண்டபின் காப்பிகுடிக்க எண்ணினான். காப்பியைப் பார்த்தான். கறுப்பாக இருந்தது. ஓட்டல் உரிமையாளரை நோக்கி ஏனய்யா காப்பியில் பாலூற்றுவதில்லையா? என்று கேட்டான். உரிமையாளர் போர்டைப் பார்க்கவில்லையா? என்று எதிர் வினா விடுத்தார். நாகமணி எழுந்து சென்று போர்டைப்பார்த்தான் "பாலைக்காட்டார் ஓட்டல்" என்று எழுதியிருந்தது.

பாரிஸ் ஓட்டிலில் ஒரு அறை. ஏறக்குறைய 20 வயது நிரம்பிய இரண்டு இளைஞர்கள் எதிரெதிரே உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் இலண்டனைச் சார்ந்தவர். பெயர் நை. மற்றொருவர் பாரிஸ் நகரினர். பெயர் நிக்சன். இரண்டு பேர்

எதிரிலும் இரண்டு பெரிய கண்ணாடிகளிருந்தன. கண்ணாடியின் வழியாக தங்கள் இருவருக்குள்ளிருக்கும் உருவ ஒற்றுமையைப் பார்த்து இருவரும் வியப்பெய்தினார்கள். அமைதி நிலவியது. திடீரென நிக்சன் தாங்கள் எந்த ஊர் என்றார். இலண்டன் என்று கூறினார் நை. மீண்டும் நிக்சன் தங்கள் தாயார் இருபது வருடங்களுக்கு முன்பு இங்கு வந்திருக்கிறார்களா? என்று கேட்டான். நிக்சனின் கருத்தைக் கணப்பொழுதில் உணர்ந்த நை, என் தாய் இங்கு வந்ததில்லை, என் தந்தை இருபது வருடங்களுக்கு முன் இங்கு வந்திருக்கிறார் என்று கூறினார். "முத்தெடுக்கப் போய் சிழிஞ்சில் அகப்பட்ட கதைபோலாயிற்று" நிக்சன் நிலை. இந் நகைச்சுவை நிகழ்ச்சியின் மூலமாகக் கவியரசர் மேனாட்டாரின் 'கற்பு நிலையைக்' குறிப்பாகச் சுட்டிக் காட்டுவது கருதத்தக்கது.

சோணாடு

உணவுப் பங்கீடு அமுலிலிருந்த நேரத்தில் தஞ்சையிலும் பஞ்சத்தின் சாயல் படிந்திருந்தது. அப்பொழுது "சோணாடு சோறுடைத்து" என்ற தொடர் மொழியிலுள்ள "சோறு" என்பதில் வல்லின றகரம் தவறாக எழுதப்பட்டுள்ளது; "சோணாடு சோர்வுடைத்து" என இடையின ரகரமே இருந்திருக்க வேண்டும் என்று கூறி உணவுப் பங்கீட்டால் தஞ்சைக்கு ஏற்பட்ட சோர்வினை எடுத்துக்காட்டுவார்கள்.

பண முடை

கவியரசர் ஓய்வு பெற்றிருந்த பொழுது அவருக்குப் பொருள் வருவாய் மிகக் குறைந்திருந்தது. நண்பர்களிடம் இதனைத் தெரிவிக்கும்பொழுது மிக நயமாக "பணமுடையேனல்லேன்" என்று கூறுவார். இத் தொடர் பணம் உடையேன் அல்லேன் என்றும் பண முடையேன் அல்லேன் என்றும் ஒன்றுக்கொன்று எதிரிடையான இரு பொருள் படுமாறு அமைந்துள்ளமை காண்க. (பணமுடை பணமில்லாமை.)

கவியரசும் கடமையும்.

வித்துவான், ந. இராமநாதன்.
துணைத்தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி.

கரந்தைக் கவியரசு, அரங்க. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த புலவரும், கவிஞரும், உரையாசிரியரும் ஆவார். இவரைத்தான் கவியரசென்று குறித்துள்ளேன். அண்மையில் காலஞ்சென்ற கவியரசால், தமிழ் நாட்டில் வதியும் புலவர்களும் பிறரும் அறிந்துகொள்ளும் கடமைகள் யாவை? என்பதை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். உலகில் காணப்படும் உயர்திணை அஃறிணையாய ஒவ்வொரு பொருளும் பல உண்மைகளை விளக்கிக் கொண்டுள்ளன. அஃறிணைப் பொருள்களும் உண்மைகளைக் காட்டும்போது, கற்று வல்ல சிறந்த மனிதனின் வாழ்வு உண்மைகளைக் காட்டாதிருக்குமோ? அவ்வாறு காணும் உண்மைகளை நம்முடைய வாழ்வில் ஒல்லும் அளவில் மேற்கொள்ளுவதே நாம் அவருக்குச் செய்யும் தொண்டாதலோடு, நமக்கும் ஆக்க வழிகளைச் செய்துகொண்டதாகவும் ஆகும்.

தமிழ்மொழிக்குத் தொண்டு செய்தோர் காலந்தோறும் பலராவர். பெருநிலவேந்தரும், குறுநில மன்னரும் புலவர்களின் வாழ்வுக்குத் தேவையான வளம்பல ஈந்து, அவர்களைத் தமிழ்த் தொண்டில் ஈடுபடுத்தியுள்ளனர். இவ்வாறன்றிப் பெருநிலங் காக்கும் வேந்தர் தாமே புலவராக இருந்து தமிழுக்குத் தொண்டு செய்த தன்மையையும் காணுகின்றோம். அரசன் வற்றாத வளம்பல ஈந்து மொழியை வளர்த்தமையை ஆயாமல் புலவராக இருந்து அரசரும் பிறரும் ஆற்றிய தொண்டுகளையும், அவற்றுள் கவியரசின் பங்கென்ன? என்பதையும், நாம் செய்யவேண்டியன என்ன? என்பதையும் முறையே விளக்க முயல்கின்றேன்.

புலவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டை மூன்று வகையாகப் பகுக்கலாம். அம் மூவகையும் யாவை? அவற்றுள் முதற்கண் கூறத்தகுந்தது பாவியற்றுதலாகும். இரண்டாவதாக உரை வரைதலைக் கூறலாம். மூன்றாவதாக கவிஞர், உரையாசிரியர் ஆயவர்களின் கருத்தைத் தெளிவாக வுணர்ந்து கேட்பார் மனங்கொள்ளுமாறு பாடங் கூறுவதனைக் கூறலாம். இம்மூன்று துறையிலும்தான் பண்டைய புலவர்கள் தமிழுக்

குத் தொண்டு செய்துள்ளனர். இம் மூவகைத் தொண்டிலும் ஈடுபட்டோரும், இரண்டை மேற்கொண்டவரும், யாதானும் ஒன்றே பற்றி நின்ற வருமெனப் புலவர் பலதிறத்தராவர் நிற்க.

முதற்கண் கூறிய பாப்புனைதலை எடுத்துக்கொள்ளுவோம். இத் தொண்டு மிகவும் அருமையானது. ஏனெனிற் கற்றவரெல்லாம் கவிபுனையும் ஆற்றலைப் பெறமுடியாது. அத்தகைய பாவியற்றும் பண்பானது, கருவிலேயே அமையவேண்டிய திருவாகுமென அறிஞர் கூறுவர் அத்தகைய பாவின் இயல்பென்ன? "பாட்டெல்லாம் மக்களின் அறிவைப் பற்றிக்கொண்டு சென்று மனத்தைத் தொடவல்ல தென்றும், உரைநடை அறிவைத் தொடுமன்றி மனத்தைத்தொடும் ஆற்றல் இல்லாததென்றும்," திருமிகு, மறைமலையடிகள் கூறுவர். ஆகவே நல்ல பாடல் என்பது அறிவையும் மனத்தையும் தொடுதலகிய இரண்டு வகையான செயல்களைச் செய்யவேண்டும். அறிவினை ஈர்த்தல் வேண்டுமெனில் எடுத்துக்கொண்ட பொருள் சிறப்புடையதாக இருக்கவேண்டும். மனத்தைத் தொடவேண்டுமாயின் பா அமையும் முறை நன்றாக இருக்கவேண்டும். பொருள் நலமும், பாவமைப்பின் மேம்பாடும் கொண்ட பாக்களே மக்களின் அறிவையும் மனத்தையும் ஒருங்கே தொடமுடியும்.

கவிதையுளம் கொண்டோர் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் துய்ப்புக்களையும் நன்கு சிந்திக்க வேண்டும். எண்ணங்களைப் பாலாகவும், நெஞ்சகத்தைக் கலமாகவும் சிந்தனையைத் தணலாகவும் கொள்ளலாம். சிந்தனைத்தணல் எரிய எரிய நெஞ்சக் கலத்திலுள்ள எண்ணங்களாய பால் கொதிக்கத் தொடங்கும். பின்னும் எரியுமாறுல் பொங்கும். அங்ஙனம் பொங்கி வழிவதே பாட்டாகும். பொதுவாக எண்ணங்களின் பொங்கலைப் பாட்டென்று கூறலாம். தந்தக் கோபுரத்தினுள்ளே தாழிட்டு உட்கார்ந்துகொண்டு உண்மையைக் காண மறுத்துவிட்டு வெறும் கற்பனைக் களஞ்சியமாக எழுதிக் குவிப்பது பாட்டாகாது. பாட்டானாலும் அது நின்று நிலவாது.

கவிதை புனையும் கவிஞனின் இயலபைக் காணுதற்குப் பல பாக்கள் வேண்டுமென்பதில்லை. வரைந்த பாக்கள் சிலவாயினும் அவற்றைக் கொண்டே சிறந்த கவிஞனென்று கூறமுடியும். ஆணும் பெண்ணும் அகமொத்துக் கூடின ரென்பதைச்

"செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே." என்றும்,

தலைவன் செய்த கொடுமையால் நாளும் வருந்தி மனம் நொந்து உடல்நிலை கெடும் பெண், தன்னுடைய இயல்பை நெருங்கியவரிடம் கூறினள் என்பதை

" கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே" என்றும்,

பாடும் பண்புடைய கவிஞர் பல பாடவேண்டு மென்பதில்லை. இவைகளே அவர்களின் பாப்புனையும் வன்மைக்குத் தக்க சான்றாக நின்று விளக்குகின்றன.

இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய கவிஞர் பலர். அவர்களுள் கரந்தைக் கவியரசு சிறந்தவராவார். இக்கால வான்முறைப்படிக் கவிதை நூற்கள் பல வரையாது போயினும் 'ஆசாறுற்றுப்படை' என்ற சிறுநூலும், வாழ்த்துப்பாக்களும், இரங்கற்பாக்களும், வேறுசில தனிப்பாக்களும் இவருடைய பாவியற்றும் வன்மைக்குப் போதிய சான்றாகும். எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம்

படித்தினித்த நாவுக்கும் பார்த்தொளிர்ந்த கண்ணுக்கும்
பார்த்த வெல்லாம்
மடுத்தடுக்கித் திளைத்திருக்கும் மனத்திற்கும் வல்லாதார்
மலிசீர்த் தோடா
தொடுத்தனர் நின் கைக்கொருகை பார்ப்பலெனத்
தனையேகொள் துணையதாகி
அடுத்தவர்க்கு வரையாத அவ்வொருகை வரைந்திட்ட
அழகு கண்டே.

இப்பாட்டு, நாவலர், பண்டித. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டா ரவர்களைப்பற்றிக் கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழா வொன்றில் தலைமை தாக்கியபோது கவியரசு பாடியதாகும். நாட்டாரவர்கள் பண்டிதத் தேர்வில் முதல்வராகத் தேறியபோது அவருக்குத் தோடா வழங்கிய செய்தியை இப்பாட்டு குறிக்கின்றது. இச் செய்தியை நாம் சிந்திப்போமாயின் கீழ் வருமாறு எண்ணலாம்.

"நன்றாகத் திறம்பட அரிய முயற்சியுடன் கற்றறிந்தாய்; அவ்வாறாய திறமையையும் அறிவையும் பாராட்டித் தோடா வழங்கப்பட்டாய்; நின் புகழ் எம்மனோரால் இயம்ப முடியுமோ?" என்று கூறுவம். ஆனல் கவியரசு கூறும் எழிலைப் பாருங்கள். கற்பதும் அதன் பயனாக அறிவடை

வதும் எங்ஙனம் என்பதை நன்றாகத் துய்த்தறிந்த அவர், பாட்டில் அமைத்துக் கூறும் பண்பை நோக்குங்கள். கற்றலும், அறிவடைதலும் நான்கு வகையான இடைவிடாத தொழில்களின் பயனாகும். அந் நால் வகைத் தொழில்களும் யாவை யெனின், பார்த்தல், படித்தல், சிந்தித்தல், வரைதல் என்ற நான்குமாகும். பார்த்தலென்பது பொதுவகையால் உரியதாயினும், ஏனைய மூன்றும் அறிவடைதலுக்கு மிகவும் இன்றியமையாதன. இஞ்ஞான்று கலைக்கூடங்களில் கல்வி பயில்வோர், நன்றாகப் படிப்பார்; ஆனால் சிந்தியார்; சிலர் நன்றாகப் படிப்பார்; சிந்திப்பார்; ஆனால் எதனையும் வரைந்து காணார். சிந்தியாமலும், வரையாமலும் படிப்பது வீணாகும். படிக்காமல் சிந்திப்பதும் வரைவதும் பயனானவேலையாக முடியாது. ஆகவே தானும் அறிந்து மற்றவருக்கும் பயன்படவேண்டுமானால் நன்றாகப் படிக்க வேண்டும்; சிந்திக்கவேண்டும், வரையவேண்டும்.

இந் நால்வகையாலும் கற்றுத் தேர்ந்த ஒருவரைப் பாராட்டவேண்டுமாயின், நான்கு தொழிலையும் குறைவறச் செய்த நான்குறுப்புக்களையும் பாராட்டவேண்டும். படித்தறியாத அரசனோ, வள்ளலோ வழங்கியிருப்பின், அவைகளின் அருமையையும், உண்மையையும் உணர்ந்து பாராட்டமுடியாது. இங்கு பாராட்டுவார் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்.

"புலமிக் கவரைப் புலமை தெளிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்"

என்றபடி, சங்கத்தார் அறிந்து பாராட்டவேண்டிய கடப்பாடுடையவர். மதுரைத் தமிழ்ச்சங்கமென்றால் சொல்லத் தேவையில்லை. தமிழ் வளர்த்தலிலும், தமிழ்ப் புலமையை அறிந்து பாராட்டுவதிலும். காலங்காணாத பழமையுடையது. ஆகவே, நிறைந்த புலமைபெற நான்கு தொழிலையும் நன்கன மியற்றிய நான்குறுப்புக்களையும் பாராட்டவேண்டும். அவர்கள் செய்ததென்ன? கைக்குமட்டும் தோடா அணிந்து சிறப்பித்தனர். இது எங்ஙனம் பொருந்தும்.? இத்தகைய எண்ணங்கள் கவியரசின் மனதில் அலைமோதுகின்றன. அவையே பாட்டாக உருவெடுத்து வெளிவருகின்றன.

முதற்கண் "படித்தினித்த நாவுக்கும்" என்று தொடங்கி இருந்தாலும், 'பார்த்தொளிர்ந்த கண்ணுக்கும்' என்பதை முதன்மையாகக் கொள்ளலாம். செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார். இங்கே பார்த்தது கண்; படித்தது நாக்கு. கொடுமைகளும், அறமல்லாதவைகளும் நிகழக்

கண்டாலும், அவைகளையே வரைந்துள்ள நூற்களையும், தாள்களையும் கண்டாலும் கண்ணுக்குக் கூச்சமுண்டாகும். இதனை, அன்பில்லாது படைத்த காரணத்தால், அமிழ்தன்ன வுணவையும்,

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே"

என்று ஔவையார் கூறுமாற்றால் உணரலாம். ஆனால் நாட்டாரவர்கள் பார்த்தது கற்றுத் துறைபோய வித்தகரது பாட்டும், உரையுமாகலின் அவைகளைப் பார்த்தகண் 'ஒளிர்ந்ததெனக் கூறிய நயம் அறிஞர்க்குப் பெருவிருந்தாமென்க. இதனைப்போலவே "இனித்தநா" என்றமையும் காண்க.

படிக்கும் தொழிலை நிகழ்த்துவது நாமட்டுமல்ல, தாழ்வாயும் உதடுகளும் இன்னோரன்ன பிறவும் தொழிற்படுகின்றன. ஆகவே படித்தல் தொழிலைக் கூற வந்தவர் நாவைமட்டும் கூறியது பொருந்தாது. நான்கு தொழிலாலும் நிரம்பிய புலமையைப் பாராட்டக் கைக்குத்தோடா அணிந்தது பொருத்தமல்ல என்று கூறும் கவியரசர் 'படித்தினித்த நா' வென்றதும் அக் குற்றம் தானே என்று நாம் எண்ணலாம். ஆனால் உண்மை இங்ஙனமல்ல. படித்தலுக்கு ஏனைய உறுப்புக்களும் தொழிற்படுமாயினும், நாத்தான் தலைமையான உறுப்பாகும். நாவில்லையேல், அல்லது இயங்காதேல் ஏனைய இயங்கினும் பேச்சு நிகழாது. உளறலாகத்தானிருக்கும். ஆகவே, தலைமை பற்றி நாவைக் கூறினாரென்க. ஏனைய பொறிகளுக்கில்லாத இனிமைப் புலனை நாவொன்றால்தான் அறியமுடியும். ஆகவே படித்தினித்த நாவென்றாரெனினும் அமையுமென்க. நாவுக்கு இனிமையன்றி ஏனைய கைப்பு முதலிய புலன்களும் இருந்தாலும் நாட்டார் பயின்றது முற்ற வுணர்ந்த மூதறிஞரின் செய்யுளும், விளக்கமுமாகலின் இனிமையை யன்றி ஏனைய புலன்களை நல்கியிருக்க முடியாது. "ஆகவேதான் இனித்த நா" வென்றார்'

அடுத்துப் பார்த்த வெல்லாம் மடுத்தடுக்கித் திளைத்திருக்கும் மனம் என்பதாகும். இங்கு பார்த்தலெனக் கண்ணுக்குரிய சிறப்பு வினையாற் கூறினும் படித்தலையும் சேர்த்துக் கூறியதாகக் கொள்ளலாம். பார்த்தலின் பயனால்தான் படித்தல் நிகழுகின்றது. ஆகவே பார்த்தவெலாம், படித்தவெலாம் மடுத்தடுக்கித் திளைத்திருக்கும் மனமென்று கூறுக. இனிப் பார்த்தலென்பது இருவகைப்படும். இதனை நோக்கிய நோக்கமென்றும், நோக்கல் நோக்க மென்றும் இருவகைப் படுத்துவர் சேனாவரையர். நோக்கிய நோக்கமாவது கண்ணாற் காண்பது. நோக்கல்

நோக்கம் மனத்தாற் காண்பது. அதாவது எண்ண உருவில் காண்பதாகக் கொள்ளலாம். ஆகவே பார்த்தவெலா மென்றது சிந்தித்த வெலா மென்று கூறினும் அமையு மென்க. இங்ஙனம் கூறவே, பார்த்தது, படித்தது சிந்தித்தது ஆகிய யாவும் மறதியால் முடிந்துவிடாது பார்த்த வண்ணமும், படித்தவண்ணமும், சிந்தித்த வண்ணமும் அப்படியே உள்ள மனமென்பது கருத்து. இதனை விளக்க மூன்று வினைகளைப் பெய்துள்ளார். "மடுத்து, அடுக்கித், திளைத்திருக்கும் என்பதாகும்" இம் மூன்று வினைகளாலும் மனதின் வன்மையைப் புலப்படுத்தியவாறாயிற்று.

இவ்வாறு பார்த்தல், படித்தல், சிந்தித்தல், வரைதல், என்னும் நால்வகைத் தொழில்களில் முதற்கண்கூறிய முத்தொழிலையும் முறைமையாகச் செய்த கண்ணுக்கும், நாவுக்கும், மனதிற்கும் சிறப்புச்செய்ய வன்மையில்லாதவர் கைக்குமட்டும் தோடா அணிந்து சிறப்பித்தனர் என்று கவிஞர் கூறுகின்றார்

அடுத்துக் கைக்கு மட்டும் தோடா அணிவித்தது முறையே என்பதையும் விளக்குகின்றார். தேர்வுக்குப் படிக்கத் தொடங்குகையில் கல்லூரி இல்லையே; சொல்லிக் கொடுக்கும் ஆசான் இல்லையே; என் செய்வது? என்று மயங்காமல் இத் தேர்வை 'ஒரு கை பார்ப்பேன்' என்று நாட்டாரவர்கள் முழுமூச்சாகத் தொடங்கினாராம். இத் தொடரைச் சிலேடைப் பொருளில் அமைத்துள்ளார். உலக வழக்கில் ஒரு கை பார்க்கின்றேன் என்றால் மேலே வரைந்த கருத்தாதலை இளைஞரும் உணர்வர். ஆனால் இன்னொரு கருத்தும் அதன்கண் உள்ளது. இக்காலத்தேர் வென்பது எழுதித் தீர்க்க வேண்டியதுதானே! ஆகவே ஒரு கை பார்ப்பேன் என்றால் ஒரு கையாலேயே எழுதிப்பார்த்து விடுவேன் என்பதும் தோன்றுகின்றமை காண்க. இன்னும் ஒரு கையிருந்தும் எழுதுகின்ற வகையில் அதன் உதவியில்லை இதனை வற்புறுத்தவே அடுத்து "தனையேகொள் துணையதாகி" என்றார். அதாவது ஒரு கையானது தன்னையே துணையாகக்கொண்டு வரைந்ததாம். மூன்றுறுப்புக்களின் இடைவிடாத தொழிலால் நிறைவுற்ற புலமையை வரைந்து காட்டுவது ஒரு கை யாயினும், கன்னா, பின்னா, என்று வரையாமல் அழகுபட வரைந்தது என்று கூறுகின்றார். வரைதலுக்காகக் கையைக் கூறவந்தவர், கையினது வேறொரு சிறந்த பண்பையும் புலப்படுத்துகின்றார். அந்த பண்பென்ன? அதுதான் இல்லையென்று தன்னை அடுத்தவர்க்கு இல்லை யென்னாமையாகும். இதனை அடுத்தவர்க்கு வரையாத அவ்வொருகை

என்றனர். இவ்விடத்து முரண்தொடை என்னும் சிறந்த அணியும் விளங்குதல் காண்க. அதாவது வரையாது வரைந்த என்பதாகும். மேற்கூறியவாறு பலகருத்துக்களை உள்ளடக்கிய சீர்களைப் பாடுவது மிகவும் அருமையாகும். இதனைத்தான் தொல்காப்பியர் நோக்கு என்பர்.

அடுத்து, உரை வரைதலைக் காண்போம். உரை வரைதல் என்பது பாட்டியற்றுதல்போல அவ்வளவு சிறந்ததில்லையாயினும், முழுவதும் செய்யுளாகவே, சொற் சுருக்கமும், கருத்துத் தெளிவும், அழுத்தமும் கருதிப் பண்டைய புலவர் நூற்கள் காணப்படுகின்றன. அக் கருத்துக்களையெல்லாம் சுருங்கிய சில சொற்களைக்கொண்டு முற்ற அறிதல் எல்லோருக்கும் முடியாது. ஆகவே நூலாசிரியன் எண்ணங்களோடு தோய்ந்து அறிந்து அதனை விளக்கும் திறமை வாய்க்கப்பெற்ற உரையாசிரியர்களும் நூலாசிரியர் போலவே மதிக்கத்தக்க பெருமையுடையவராவர் "கசடறக் கற்க" என்றார் வள்ளுவர் இங்கு கல்விக்குக் கசடு அதாவது குற்றம் என்ன என்று வள்ளுவர் கூறவில்லை. நாமே எண்ணினாலும் சரியாகப் புலனாகாது. இதனைப் பரிமேலழகர் ஐயம், திரிபென்று கூறியவுடன் தெற்றென விளங்குகின்றது. ஆகவே 'கசடறக் கற்க' வென்று கூறுமுகத்தான் வள்ளுவரும், கசடை அறிந்து அவைகளைப் போக்கிப்படி என்ற முகத்தான் பரிமேலழகரும் ஒத்த அளவில் மக்கட்குரியராகின்றமையைக் காண்க. நூலாசிரியன் கருத்தை விளக்குவது உரையாயினும், உரையாசிரியர்கள் சில இடங்களில் தங்கள் கருத்தை நூலாசிரியர்மீது சுமத்திக் கூறும் தன்மையையும் காணுகின்றோம். இதனை அறிஞர் பகுத்துணரவேண்டும். இவ்வாறு உரை கூறுவதில் தலைசிறந்தவர் நச்சினார்க்கினியராவார்.

உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியர் பல நூற்களை நுட்பமாகக் கற்ற பேரறிஞர். ஓரியந்திரத்தை நன்கறிந்தவன், அதனைப் பிரித்து மூலைக்கிரண்டாகப் போட்டுவிட்டு மீண்டும் பொருத்தி இயங்கச் செய்வதுபோல, இவரும் சொற்களைப் பிரித்துக் கண்டபடியெல்லாம் கூட்டிப் பொருள் வரைவர். இயந்திரத்தில் வல்லவனாவது முன்னிருந்தவாறே பொருத்தி இயங்கச் செய்கின்றான்; இவர் இங்ஙனமல்ல. இயந்திர வல்லவன் மாறுபடக் கோத்தால் அவ்வியந்திரம் ஓடாது. ஆனால், நச்சினார்க்கினியர் தன்னுடைய அளவிறந்த வன்மையால் மாற்றிக் கோப்பார். ஆனால் இந்தப் பா இயந்திரம் ஓடும். இதுதான் இவருடைய அளவிறந்த புலமையின் வன்மைக்குச் சான்றாகும். இங்ஙனம் இவர் கொண்ட முறை சரியானது என்று நாம் பின்பற்றாவிட்டாலும், கண்டபடிப் பிரித்துக் கூட்டிச் சமாளிக்கும் இவருடைய புலமையை எந்த அறிஞனும் வியவாமலிரான். இவ்வா றெல்லாமில்லாமல் நூலாசிரியன் கருத்துணர்ந்து விளக்கும் ஆற்றல் கவியரசரிடம் மிக்கிருந்த தென்பதனை, அகநானூற்றுப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் காணலாம். இதனைச் சான்றுடன் கூறி விளக்கத் தொடங்கின் பெருகுமென்க.

அடுத்துப் பாடங் கூறுதலாகும். இதற்குச் சான்ருகப் பல எழுதத் தேவையில்லை. சுருக்கமாக மாணவன் மனதிற் கொள்ளும் வகையறிந்து கூறுவதில் இவருக்கிணையானவர் இல்லையெனலாம். இவ்வாறு பாடம் கூறும் திறமை இஞ்ஞான்றைய ஆசிரியர்களிடம் மிகவும் குறைந்து விட்டது. கல்வியில் மாணவர்கட்கிருக்கும் இகழ்ந்த மனப்பாங்கும் பெருகிவிட்டது. அறிவில்லாத இவ்விரண்டும் கூடிப் பெற்றெடுத்த அருமையான குழந்தைகளே அறிவில்லாத அறிஞர்களும், புலமையே யில்லாத புலவர்களுமாவர். இக்குறையை மேலும் வளரவிடக்கூடாது. ஆசிரியர் மாணவர் ஆகிய இருதிறத்தாரும் தங்கள் கடமையை உணர்ந்து செயலாற்ற கவியரசர் எடுத்துக்காட்டாக வுள்ளார்.

பண்டைய புலவர்கள் வகுத்துக்கொண்ட, பாவகுத்தல், உரைவகுத்தல், பாடங் கூறுதல் என்ற அளவில் இன்றைய புலவன் இருக்க முடியாது. புதிதாக வளர்ந்து வரும் இலக்கியப்பகுதி ஒவ்வொன்றிலும் திறமையடைய முயலவேண்டும். புதுவது புனைதல் (Novel) சிறுகதை புனைதல் (Short Stories) மொழி பெயர்ப்புக்கள் (Translation) சொற்பொழிவாற்றல் அன்ருட உலகியல் நிகழ்ச்சிகளை நம் நாட்டிற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற வண்ணம் அறிந்து அமைத்துக்கொள்ளுதல் ஆகியசிறந்த கடமைப்பாடுகள் பல்கியுள்ளன. தமிழ் நாட்டில் எத்துறையில் வாழும் தமிழ் மகளுக இருந்தாலும், தமிழறிவும், தமிழ் நாட்டில் பற்றும் உடையவளுகத் திகழ ஆவன செய்தல் வேண்டும். அண்டை மொழிகளெல்லாம் சலுகை பெற்றுச் சிறக்க, நம்முடைய பண்டைத் தமிழ் மட்டும் அச்சலுகைகளைப் பெற்றுச் சிறக்காதிருக்கும் கொடுமையை மாற்றவேண்டும். யாருடன் வேண்டுமாளுலும் தமிழன் சேர்ந்து தொண்டாற்றலாம். ஆனல் தான் தமிழன் என்பதையோ, அதற்குரிய சிறந்த பண்பாட்டையோ இழந்துவிட்டு முழு அடிமையாக யாருடனும் சேராத உரம்பெற வேண்டும். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும் இஞ்ஞான்றைய தமிழன் வாழ்வின் போக்கை மாற்றவேண்டும். இவைகளும் பிறவும் இஞ்ஞான்றைய தமிழர்களின் கடமைகளாகும்.

இதுகாறுங் கூறியவாற்ருல் தமிழ் நாட்டில் பண்டைய புலவர்கள் பாவகுத்தல், உரை வரைதல் பாடங் கூறுதல் ஆய மூன்று வகையாகத் தமிழுக்குத் தொண்டு செய்தனரென்பதும், அவைகளின் இயல்புகள் இன்ன என்பதும், அம் மூவகைத் தொண்டிலும் கவியரசர் சிறந்து, மூவகை யாற்றலும் இழந்து நிற்கும் இஞ்ஞான்றைய மக்கட்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன ரென்பதும், இன்றைய தமிழ் நாட்டில் அந்த அளவின்றித் தொண்டுகள் விரிந்துள்ளன என்பதும் அவைகள் இன்ன என்பதும், அத்துறைகளிலெல்லாம் தமிழன் முன்னேறவேண்டுமென்பதும், இவைகளே புலவர்க்கும் பிறருக்கும் சிறந்த கடமைகளாகு மென்பதும் பிறவும் விளக்கப்பட்டன.

வாழ்க கவியரசின் புகழ். :: வளர்க தமிழகம்.

"புலவரை இழந்த தலைவரின் துயரம்"

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக சங்கத் தமிழ்ப் பெரு மன்றத்தில் 1953 திசம்பர் 12-ஆம் நாள் திங்கள் மாலை 6 மணிக்கு மறைந்த கவியரசருக்கு ஒரு "இரங்கற் கூட்டம்" நடைபெற்றது. அதுபோழ்து, சங்கத்தலைவர் ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்கள் தலைமை தாங்கிப் பேசும்போது கவியரசரின் புலமை, தொண்டு, செய்யுளியற்றும் ஆற்றல், பழந்தமிழ் நூலுக்கு உரைகண்ட பெருமை, நகைச்சுவை அமையப் பேசுந் திறம் முதலியவற்றைப் பலபடப் பாராட்டியதோடு அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தார்க்கும், தமிழ் உலகிற்கும் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

அவரது இழப்பினைப்பற்றிக் கூறும்போது, இந்த விசய ஆண்டில் திரு. வி. க. பண்டிதமணி. கதிரேசனுர், கவியரசர் முதலிய தமிழ்ப் பேரறிஞர்களை இறைவன் நம்மிட மிருந்து பிரித்துத் "தேவருலகில் ஒரு தமிழ்ப் பேரவை நிறுவிக்கொண்டான்போலும்" என்று உள்ளம் மிக நைந்து கூறினர்கள்.

அவரது புலமையைப் பற்றிக் கூறும்போது, அவர் தானே கற்றுத் தேர்ந்த பெரும் புலவரென்றும், மாணவர்களுக்குத் தமிழ்ப் பயிற்றுவதில் ஒப்பற்று விளங்கினரென்றும், இருபதாம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த அருந்தமிழ்ப் புலவர்களில் முதன்மையானவரென்றும், கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய காலந் தொட்டு "சங்கப் புலவராக" இருந்து ஆற்றிய தொண்டு அளவிடற்கரிது என்றும் குறிப்பிட்டார்கள்.

அவரது கவிபாடும் திறமையைப் பாராட்டி சங்கத்தார் "கரந்தைக் கவியரசு" என்று சிறப்புப் பெயர் சூட்டி

மகிழும் அளவுக்குப் பெரும் கவியரசாகத் திகழ்ந்தார் என்றும், அவர் திருவையாற்று அரசர் கல்லூரியில் பேராசிரியராகத் திகழ்ந்த காலத்து நீரில் மூழ்கி இறந்து விட்ட கோபாலன் என்ற ஒரு மாணவனுக்கு "இரங்கற்பா" வொன்று பாடுமுகத்தான் பிற மாணவர்களுக்கு அறி வூட்டக் கருதி

> " நீரிலே தாவிமூழ்கி நீந்தியோ டித்திரிதல்
> சீரிலாச் செய்கையெனச் செப்புங்கள்—பாரிலே
> முன்னவன் சொல்லென்றே மூழ்குங்க ளென்றுமக்கே
> சொன்னவன்கோ பாலனந் தோ "

என்று ஒரு வெண்பாவிலே இரண்டு எண்ணங்களைத் தீட்டிக் காட்டினார் என்றும் வியந்துரைத்தார்கள்.

மேலும் தமிழின் பெருமைக்குக் குறைவு ஏற்படும் வண்ணம் யாராவது பேசினால் அவர்களைக் கவியரசர் கண்டிக்கும் முறையை வியந்து, திருவையாற்று அரசர் கல்லூரியின் சார்பாக நிகழ்வுறும் "திருவள்ளுவர் கழக ஆண்டுவிழா" ஒன்றில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றனை எடுத்துக்காட்டினார்கள். "அவ்வாண்டுவிழாவில் பேச்சாளராக விருந்த திரு. வே. வேங்கடராஜலு ரெட்டியார் அவர்கள் பேசும்போது தமிழ் மொழியை இன்று 'செந்தமிழ்' என்று வழங்குவதால் ஒருகாலத்தில் இத்தமிழ் 'கொடுந்தமிழாகத் தான் இருந்திருக்கவேண்டும் என்றும், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிக ளாலேயே தமிழுக்குச் சிறப்பு உண்டாகிறது என்றும் கூறினார்கள். இக் கருத்தை யுடன்படாத கவியரசர் இறுதியில் நன்றியுரை நவிலுங்கால் சூரியனை இன்று 'செஞ்ஞாயிறு' என்று நாம் கூறுவதால் அது ஒருகாலத்தில் 'கருஞாயிறாக'த்தான் இருந்திருக்கவேண்டுமென்று திரு. ரெட்டியாரவர்கள் பேச்சிலிருந்து உணர்ந்துகொண்டேன் என்று கூறவே, கூட்டத்தினர் பெரும் ஆரவாரம் செய் தார்கள்; உடனே ரெட்டியார் எழுந்து "தமிழை இழிவு

கரந்தை கணேசன்.

செந்தமிழ் வாழ்வைச் சிந்தையுள் கொண்டே
நந்தமிழ் போற்றி நாளும் வளர்த்திட
முன்னைப் புலவர் பனுவல் ஆய்ந்தே
எண்ணி எழுதி இன்தொண் டாற்றி
முத்தமிழ் காத்த வித்தகர் அவரோ,
போற்றப் பல்லோர் ஏத்த வாழ்ந்த
பெருந்தகை, நல்லோரார் பெருமையால் மிக்கார்
ஆன்றநூற் புலவர் அறிவின் ஊற்று
சிந்தையும் மொழியும் சிறப்புற அமைந்த
பண்புடை யாளர் பயில்வார் நகைச்சுவை
தமிழே வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்
என்னுங் கொள்கையில் மன்னிய சீலர்!
தகைசேர் கரந்தைத் தமிழ்ச்சங் கத்தில்
கவியின் அரசாய்த் திகழ்ந்தபே ரறிஞர்.
அன்னார்; இன்னாள்; என்னே சொல்வேன்!
பொன்னார் உலகம் போகிய நிலையே!

படுத்தும் எண்ணத்தோடு நான் கூறவில்லை; என் கருத்தைத் தெரிவித்தேன்; இதுதான் உண்மையென்று நான் கூற முன்வரவில்லை என்று கூறியமர்ந்தார்" என்று கூறினார்கள்.

இறுதியில் "தமிழின் உயர்வே தம் வாழ்நாளின் குறிக் கோள்" எனக் கொண்டு வாழ்ந்த கவியரசருக்கு "நினைவுக் குறி" ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும், அவரிடம் பயின்ற மாணவர்கள், அவர்பால் உழுவலன்பு கெழுமிய செல்வர்கள், தமிழின்பால் பற்றுக்கொண்ட அறிஞர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி ஒரு பெரும் நிதி திரட்டி அந்த நிதியை அவர் பெயரால் 'மாணவர்களுக்குப் பரிசளித்தல்" போன்ற தமிழ் வளர்ச்சிக்குப்பயன் படுத்தக் வேண்டுமென்றும் அதுவே மறைந்த தமிழ் பெருமக ஞர்க்கு நாம் செய்யும் சிறந்த கைமாறுகும் என்றும் கூறி வாழ்க! அவர் புகழும், அவர் போற்றிய தமிழும் என்று வாழ்த்தி அமர்ந்தார்கள்.

“கரந்தைக் கவியரசு”

கி. ஆ. பெ. விசுவநாதன்.
ஆசிரியர், “தமிழர் நாடு” திருச்சிராப்பள்ளி.

கரந்தைக் கவியரசு, திரு. அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் கரந்தையின் கவியரசாக மட்டுமில்லாமல், தமிழகத்தின் கவியரசாகவே திகழ்ந்தார்கள்.

அவர்களது அன்பும், அருங்குணமும், இன்சொல்லும், எளிய வாழ்வும், நற்பண்பும், எவராலும் மறக்கமுடியாதன. அவரது கவிதைகளிலுள்ள தீஞ்சுவைகளை, சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்தவர்களில் யானும் ஒருவன்.

காலஞ்சென்ற தமிழவேள் திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் மறைவுக்குப்பின் கவியரசின் சொல்வாக்கும், செல்வாக்கும் மறையத் தொடங்கின. இப்போது தமிழ் தோய்ந்த அவர் உள்ளமும் அழிந்துபோய் அவரது உடலும் அழிந்து மறைந்து விட்டன. என்செய்வது.

கவியரசு பல புலவர் பெருமக்களை தோற்றுவித்த ஒரு புலவர் பெருமகன். அவர் பரம்பரை அழியாது; தமிழும் தமிழகமும் உள்ளவரை தமிழ்ப்பெருமக்கள் அவரை மறவார்கள். வாழ்க கவியரசின் புகழ்!

பொழில் அன்பர்கட்கு வேண்டுகோள்.

தமிழ்ப்பொழில் ஆசிரியர் மாற்றத்தாலும், கரந்தைக் கவியரசர் நினைவுமலர் வெளியீட்டின் காரணமாகவும் இரண்டு திங்கள் பொழில் வரவு தடைப்பட்டது. அக்குறைபாட்டை இந் நினைவுமலர் வாயிலாகவும் அடுத்து வரும் பொழில்கள் வாயிலாகவும் நிறைவு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

மன உலகம்.

வித்துவான் திரு ச. பாலசுந்தரம், அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

(கவிதை நாடகம்)

[நன் மாறன் உலகமெல்லாம் சுற்றிப் பலதரப்பட்ட மக்களின் பழக்க வழக்கங்களைக் கண்டு உலக அமைதிக்கான வழி முறைகளை வகுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மிக்க சிந்தனையாளனாய் படுக்கைக்குச் செல்கிறான். உறக்கம் வரவில்லை “ஆண்டவனே என் விருப்பம் நிறைவேறுமா?” என்று கூறிக்கொண்டே ஆண்டவனைத் தியானித்து விட்டுப் படுக்கிறான். மணி 12 அடிக்கிறது. கனவு காணுகிறான். கடவுள் ஒளி உருவத்தோடு அவன் முன் தோன்றுகிறார். வணக்கத்துடன் வேண்டுகிறான்.]

1

நன்மாறன் :-

உலகமெலாம் படைத்தளிக்கும் ஒளியே! தூய
உண்மைஎலாம் விளக்குகின்ற அறிவே! ஞானம்
அலகிலவாய் நிறைந்தபெரும் அன்பே! என்றன்
ஆண்டவனே! பெருநிதியே!! உலகம் யாவும்
கலகமிலா தமைதியுடன் கலந்து வாழும்
கருத்தினை நீ கொடுத்தளித்தால் குறையோ! என்றன்
புலநிறையும் வகையெனக்குப் போதிப்பாய்! இப்
பூவுலகின் நிலைமையெலாம் அறிய வேண்டும்.

2

ஞானக்கண் கொண்டுலகம் முழுதும் காண
நல்லதொரு வரமெனக்கு நல்கல் வேண்டும்
மோனத்தின் முழுப்பொருளே! முதல்வா!! உற்ற
முழுக்கலையும் யானறியும் அறிவு வேண்டும்
“தானத்தில் மிக்கவனெ” ன்றுனைச் சொல்வார்கள்
“தாயைவிட அன்பனெ” னத்தரணி கூறும்

வானத்தின் நிலைகாண வேண்டேன் வாழும்
மண்ணுலகின் நிலையறியும் ஆசை கொண்டேன்.

3

கடவுள் :-

குவலயத்தின் நிலையறியும் குறிப்பு மிக்கோய்!
குழந்தாய்நீ அதையறியும் திறம் பெற்றாயோ?
கவலை மிகக் கொள்வதனால் ஞானந்தாங்கும்
கடுவலிமை பெற்றாயோ? சிறிதும் இல்லை.
திவலையெனும் அறிவுடையோய்! அன்பா!! உன்னைத்
தெளிந்தபின்னர் உலகநிலை தெளிய வேண்டும்
அவலமுள்ள உன்னுளத்தில் ஆட்சி செய்யும்
அருங்குணங்கள் யாவையும்நீ அறிந்துள் ளாயோ?

4

நன்மாறன் :- [ஆச்சரியத்தோடு சிறிது சிரித்து]

என்னமோ செய்கின்றீர்! என்றன் உள்ளம்
யானறியா திருப்பனோ? பின்அறிவார் யாரோ?

கடவுள் :-

கோனுடைய அன்பா! நீகொண்ட எண்ணம்
குறைபாடாம் குவலயமோ உன்றன் உள்ளம்?
தானுடைய தவமுனிவர், சித்தர் ஞானந்
தனையடைந்தோர் முழுவதுமே உணரார் தம்மை

நன்மாறன் :-

மூனுமொரு எண்ணமெலாம் யானே எண்ணி
முடிக்கின்றேன்! என்னைவிட்டு மனமும் வேறோ?

5

கடவுள் :- [கலகலவெனச் சிரித்துவிட்டு]

உள்ளமென்ப துலகைவிடப் பரந்த தப்பா.
உணர்வுடையோர் ஒருசிறிதே அறிந்திருப்பார்.

வெள்ளம்நிறை கடலோடு விண்ணும் மண்ணும்
மிகச்சிறிது 'மன உலகம்' மிகப்பெரிது! ஆம்!

நன்மாறன் :- [ஆச்சரியமுற்று]

உள்ளபடி பெரிதாயின் ஆங்கே யுள்ள
ஒண்பொருள்கள் யாவை? அதைஉணர்த்த வேண்டும்

கடவுள் :-

கள்ளமிலோய் 'மன உலகில்' காடும் உண்டு
கல்மலையும் கடுவிலங்கும் கடலும் யாவும்.

6

பாம்பினமும் பறவைகளும் பருதி திங்கள்
பற்பலவும் உண்டதனிற் பழகிப் பார்த்தால்.........

நன்மாறன் :- [விரைவுடன்]

ஆம்புதுமை ஐயாயான் அறிய வேண்டும்!
அதற்கறிவு நீயருளிச் செய்ய வேண்டும்.

கடவுள் :- [சிரிப்புடன்]

சோம்பலின்றிப் பார்உனக்குத் துயரம் நேர்ந்தால்
துறந்ததனை மறந்துவிடும் வரமும் தந்தேன்.
[கடவுள் மறைகிறார்.]

நன்மாறன் :-

தேம்பழுத்த இனிமைமிகு தெய்வமே! யான்
சிறப்படைந்தேன் 'மன உலகம்' செல்கின்றேன்.

[பலவகையான ஒலிகளும், அழகான உருவங்களும், விகாரமாக உள்ள உருவங்களும் பலப்பல தோற்றுகின்றன. இமைக்கும் பொழுதில் பலவகைக் காட்சிகள் தோன்றித் தோன்றி மறைகின்றன, பலவகையான தோற்றங்கள் இவனருகே வந்த வண்ணமும் மறைந்த வண்ணமுமாய் இருக்கின்றன. இருளும் ஒளியும், அமைதியும் ஆரவாரமும் மாறி மாறி நிகழ்கின்றன. அப்பொழுது சிலரைச் சந்தித்துப் பேசுகிறான்.]

7

நன்மாறன் :—

இருளொடு ஒளிவிரவும் இவ்வுளத்தில்
ஏதேதோ பொருள் நிறைந்த காட்சி ! அ ஆ !!

[வியப்புடன்]

திரளாகச் சேர்ந்திருப்போர் யாவர் ஆங்கே !
சிரித்தஉளத் தோடிருவர் வருகின்றாரே,

[அவர்கள் நெருங்கி வந்ததும்]

உருமேவும் பெண்ணரசாய் உள்ளீர் ! நீர் யார் ?

அன்பு :— [பெண்குரல்]

ஒளியுடைய "அன்பென்" பார் இக்குழந்தை
அருளாவாள்,

நன்மாறன் :—

என் மனத்தில் உள்ளீரோ நீர் ?

அன்பு :—

ஆம் சிறிது வந்து வந்து போவோம் இங்கே.

8

நன்மாறன் :—

எப்பொழுதும் என்மனத்தே இருந்தால் என்ன.

அன்பு :—

இருப்பதற்கா ! என்பகைவர் விட்டால்தானே.

நன்மாறன் :—

அப்படியா ! உம்முடைய வேலை என்ன ?

அன்பு :—

அருஞ்சுற்றம், பெண்டு, பிள்ளை, வறுமையுற்றார்
செப்பருநோய் உற்றவர்கள் சிதைவ டைந்தோர்
சீர்பெற யாம் துணைபுரிவோம் சிந்தை நின்றே.

[அப்பொழுது 'வெகுளி' என்பவன் அப்பெண்களை இடித்துத் தள்ளிவிட்டு வருகிறான்.]

நன்மாறன் :— [மிக்க கோபமாய்]

இப்படிநீ இடித்தவரை ஓட்டி என்முன்
இருக்குமொரு கொடுமுகத்தோய் யாரடா நீ ?

9

வெகுளி [தடித்த குரலுடன்]

மனஉலகில் ஈடில்லா மறவன் யானே
"மாயாத வெகுளி"என எனைச்சொல்வார்கள்.

நன்மாறன் [படபடத்து]

நினைவுகொண்டு கலகமிட எண்ணி வந்தாய்
கேடுகெட்ட பேதாய் ! நீ அப்பாலே போ
உனைக்கான எல்லைகள் கூகும் சீ சீ

வெகுளி :—

உனக்கடங்கார் வஞ்சர்உன துரிமை கொள்வோர்
வினைக்கேடர் யானின்றேல் திருந்துவாரோ ?
வேண்டும்வழி எனைச்செலுத்த வீரம் வேண்டும்

[என்று கூறி மறைந்து விடுகிறது. அப்பொழுது நரித் தலையோடு ஒரு உருவம் முன்னே வருகிறது.]

10

நன்மாறன் :—

உடல்கருத்து நரித்தலையோ டுண்டு வந்தென்
உறவுகொள விழிக்கின்றாய் ! யாரப்பா நீ ?

வஞ்சம் [பவ்வியமாக]

கடலுலகில் எனைவேண்டா மனிதரில்லை
'கருதரிய வஞ்ச' மெனும் பெயர்பெற் றேன்யான்

நன்மாறன் :—

அட பாவி ! என் மனத்தும் உள்ளாயோ? நீ?
ஐயையோ நீஎனக்குச் செய்வ தேது?

வஞ்சம் [குரூரச்சிரிப்புடன்]

மடமையினால் எனைவெறுத்தாய் மண்ணின் மீது
வாழ்வதற்கும் பகைவரிடை மீள்வதற்கும்

11

வாணிகத்தை நன்முறையில் வளர்ப்ப தற்கும்
வாய்த்த பொருள் காப்பதற்கும், உன்னை ஏனோர்
காணாத வகைசெயற்கும் கருதார் தம்மைக்
காலம்மாறும் போதுவென்று களிப்ப தற்கும்

நானுடைய நல்லாரைச் சுவைப்பதற்கும்
நானேதான் துணைபுரிவேன்

நன்மாறன் [கபடசிரிப்புடன்] ஓகோ உன்னைப்
பேணாமல் ஒழுகுதற்கு முடியாதோ ஹூம்
பெரும்புதிர்தான் 'மனஉலகம்' இன்னும்பார்ப்போம்
[சிரிப்புடன் வஞ்சம் போகிறது. அமைதியுடன் ஈகை வருகிறது]

12

மதிபோலும் மலர்ந்தமுக மகிழ்ச்சியோடும்
மருவிவரும் நீயார்? என்உறவோ அம்மா?

ஈகை [பெண்குரல்]
நிதியுடையோர் சிலரிடையும், நிறைந்த கல்வி
நேயமுளோர் சிலரிடையும் இருப்பேன் ஈகை
சதிநிறைந்த மனத்தினிலே வாழேன்

நன்மாறன் [வணக்கமாய்] உன்னால்
சாருகின்ற நன்மை எவை? சாற்றும் தாயே!

ஈகை :—
விதிவலியால் ஏழ்மையுற்றார் வீறு கொள்ள
வெந்துயரால் மெலிந்தவர்கள் மேன்மை பூக்க

13

அறிவுநிலை வளராதார் ஆக்கங் கொள்ள,
அண்டினவர் அமைதிபெறும் வாழ்வுசேரச்
செறிவுமிகுந் தொழில்வளரச் செய்வேன் யானும்
சிலருளத்தில் குடியிருப்பேன் சிலர் உலத்தில்
உறைவதுடன் ஓடுவதும் செய்வேன்
[அப்பொழுது பருத்த உருவத்தோடு ஈகைத்தாயை மிதித்து நசுக்கி அதன்மீது ஏறி வருகிறான் லோபம்.]

நன்மாறன் [முக வருத்தத்துடன்] ஐயோ!
ஓதிமரம் போல் ஈகையினை மிதித்து வந்து
கறைபடியும் முகத்துடனே நிற்கும் பேயே!
கல்லோஉன் நெஞ்சம்? நீயாரடா சொல்?

14

லோபம் [கேலிச்சிரிப்புடன்]
யானிருக்கும் மனம்எனக்கே அடிமை யாகும்
நானிலத்தோர் 'லோபம்' என்று சொல்வார்என்னைத்
தேன்போல விரும்புகின்ற மக்கள் இந்த
தேயமெங்கும் நிறைந்துள்ளார்

நன்மாறன் [வெறுப்புடன்] தீயோய் உன்னால்
யான் கொள்ளும் பயனில்லை

லோபம் [சிரித்துக்கொண்டே] நல்லாய்! கேள்உன்
நற்பொருளைச் சூதுவஞ்சம் பொய்யோடுற்று
மீன்போல அரித்துண்ண வருவோர் தம்மை
விலக்கிநலம் செய்வதுதான் என்றன் வேலை

15

எனையறிந்து பயன்கொள்ள அறிவு வேண்டும்
இல்லைஎனிற் பாவமெலாம் எளிதிற் சேர்ப்பேன்

நன்மாறன் [விடாமல்]
உனைவிடுத்து வாழ்வதற்கு முடியாதோசொல்

லோபம் :—
ஒண்பொருளைச் சேர்க்கும் அவா உள்ளமட்டும்
எனைவெறுக்க முடியாதவ் 'அவா' என் அண்ணன்
எப்பொருளும் யானின்றேல் நிலையா தப்பா.
[அப்பொழுது உயர்ந்த உருவத்துடன் 'அவா' வருகிறான்]

நன்மாறன் [ஆசையோடு அவனைப்பார்த்து]
பனைபோலும் உயர்ந்து நிற்கும் இவனா அண்ணன்?
[லோபம் ஆமாம் என்று கூறி மறைகிறது. அப்பொழுது அவாவைப் பார்த்துக் கூறுகிறான்]

நன்மாறன் :—
பண்பில்லாய்! நீசெய்யும் பணிகள் யாவை?

16

அவா [இறுமாப்புடன்]
ஞாலமெலாம் விளங்குவதே என்னால் தம்பி
ஞானிகளும் எனைவெறுக்க மாட்டார். இந்த
கோலநிறை உலகினிலே பெண்டிர் மக்கள்
கொள்கை நிறை சுற்றமெலாம் கூடுதற்கும்

சிலம்வளர் கல்விவளம் செல்வம் மேன்மை
செழும்புகழும் யானின்றேல் இல்லை தம்பி
வாலறிவால் எனைச்செலுத்த மாட்டா ராகில்
வலியகொலை களவுமுதல் பாவம் சேர்ப்பேன்.

17

எல்லையறிந் தெனைக்கொள்வோர் ஏற்றம்கொள்வார்
இல்லையெனில் என்வலையிற் சிக்கி மாள்வார்
[என்றுகூறி மறைந்து விடுகிறது. உண்மை அங்கு ஒளி உருவோடு வருகிறது.]

நன்மாறன் :–

சொல்லரிய ஒளியோடு வந்து நிற்கும்
தூயோய்! நீ! யார் எனக்குச் சொல்லவேண்டும்!

உண்மை [பெண் குரல்]

நல்லவர்கள் மனத்தகத்து நாட்டங் கொள்வேன்
நலம்பயக்கும் 'வாய்மை' எனச்சொல்வார் என்னை
தொல்லைமிகும் உலகினிலே தூய்மை ஓங்கத்
துணைபுரிவேன் தீமைதரு குணங்கள் என்னை

18

மாயாத பகைஎன்றே சொல்லும் ஆட்சி
மனவுலகில் யானேற்றால் மண்டி நின்ற
ஓயாத இன்னல்தரும் குணத்தை வாட்டி
ஒளிநிறையும் பண்புகளை உறைய வைப்பேன்
காயாமல் எனைவைத்துக் காப்போர் இந்த
கடலுலகில் மிகச்சிலரே மற்றோர் என்பேர்
வாயாரச் சொல்வார்கள் மனத்திற் கொள்ளார்.

19

அவைபுகழப் பேசுபவர் என்னைக் கொள்ளார்
அமைதியினை நாடுபவர் அடைவார் இன்னும்
சுவையென்றே வேண்டுபவர் துறப்பார் என்னை
தூயநடை உற்றவரே துணையாய்க் கொள்வார்
நவையுடைய குணங்கண்டால் நழுவிச் செல்வேன்
நடுநிலைமை ஒழுக்கம் அறம் நண்பாய்க் கொள்வேன்
[என்று கூறிக்கொண்டே மறைகிறது அப்பொழுது கருத்த உருவத்துடன் இரட்டை நாக்கோடு பொய் வருகிறது.]

நன்மாறன் :– [வெறுப்பாய்]

கவையுடைய நாவுடனே கருத்து வந்து
கலக்கமுற எனையடையும் கயவா! நீயார்?

20

பொய் [மெதுவாக]

தீங்குவரும் போதுனக்குத் துணையா வேன்யான்
தெளியாதார் 'பொய்ம்மை' எனச்சொல்வார் என்னை
பாங்குடைய வஞ்சனை என்பிள்ளை யாகும்
பணிவில்லா வாய்மை எனைப் பகைவன் என்னும்

நன்மாறன் :–

தாங்கரிய வலியுடைய சழக்கனே உன்
தகுதியிலா உறவெனக்கு வேண்டாம் போ போ

பொய் [உரக்கமாய்]

ஓங்கியநற் புகழ் இல்லாய்! உலகில் உள்ளோர்
ஒவ்வொருவர் மனத்தகத்தும் உறைவேன் எ

21

அரசியலார், வாணிகத்தார், வழக்கு நூலோர்
அரியபெருஞ் சோதிடர்கள் மாந்திரீகர்
உரைசெறியும் புலவரோடு மருத்துவர்கள்
உறவுற்றார் போல்நடிக்கும் விலைமாதர்கள்
பிரியமுடன் கொள்ளுமொரு பெருமை பெற்றே
பிழை செய்வோர் எனைவிரும்பிப் போற்றுவா
விரிவுடைய பொருள்கருதி வினைசெய் வோரும்
வீண்பெருமை கொள்பவரும் வேட்பார் எனை
[அப்பொழுது அழுக்காறு வருகிறது. அதனுடன் கோளும் (குறளை) வருகிறது.]

22

அழுக்காறென் றம்பி அதோ வருகின் றான்பார்
[பார்த்துவிட்டுத் துடிதுடிப்புடன்]

நன்மாறன் :–

ஐயையோ! அவனுறவு எனக்கு வேண்டாம்

பொய் :–

செழிக்காதே அவனின்றேல் உன்றன் வாழ்வு
செறிந்தகல்வி, நற்பதவி, செல்வம் யாவும்

பழுத்தோரை அவனடுத்துப் பாரா விட்டால்
பாரினிலே நீயும் ஓர் பதர்போல் ஆவாய்.
இழுக்காமல் சேர்ந்தவர்கள் ஏற்றம் கொள்வார்
இல்லெனிற் பாழ்படுவார்;

23

நன்மாறன் [கோனைப்பார்த்து மெதுவாக]
நீயார் ? முட்டாள்.
கோள் [கோள் சொல்லுதல்]
கோள் எனவே எனைச்சொல்வார் குவலயத்தார்
நன்மாறன் :—
குறைகூறும் பண்புடைய கொடியோன் நீ, யா ?
கோள் [பெரும் சிரிப்புடன்]
நாளொன்றிற் சிறுபொழுதும் என்னை நீக்கி
நல்வாழ்வு நடத்துபவர் உலகில் யாவர் ?
வாளின்றிப் பகைவெல்லும் வன்மை என்றன்
வாக்கினிலே உள்ளதைநீ அறியவில்லை
ஒன்றி வாழ்வதை நான்பார்த்தால் ஆண்டுக்
கிளர்ந்து சென்று வேறுபட வைப்பேன் தம்பி.
[என்று கூறிச் செல்கிறது அப்பொழுது 'காமம்' வருகிறது.]

24

றன் [தளர்ந்து]
யினுக்குநடை தளுக்குடனே மெலிவு செய்யும்
யிடுக்குடைய பேதாய் ! நீ............... ?
காமம் [புன்னகையுடன் பெண்குரல்] காமம் என்ப
தெனக்குடைய பெயர் யானே இல்லாவிட்டால்
இவ்வுலகில் எவ்வுயிரும் இல்லை யப்பா
மனக்கருத்தை என்வழியில் இழுத்துச் சென்று
மங்கைநலம் உண்ணுதற்குத் துணையாய் நிற்பேன்
உனக்கிசைந்தார் இசையாதார் எல்லாம் என்றன்
உதவியினால் உனக்கிசையச் செய்வேன், வேண்டார்

25

காதலுக்கும் கற்பினுக்கும் பகைஎன் பார்கள்
நன்மாறன் :—
கன்னியரைக் காளையரைக் கெடுக்கும் பேயே !
சாதலுக்குத் துணிவுதரும் தாழ்வு கொண்டாய் !

சார்ந்தவரைப் படுநரகில் தள்ளுவாய் நீ
ஓதலுக்கும் பெரும்பகை உன் உறவு வேண்டாம்
ஓடிப்போ சீ சீ சீ.... ....
காமம் :— [மந்தச்சிரிப்புடன்] உன்றன் தேகம்.
கூதிருக்குக் குன்றுகின்ற போத ழைப்பாய்
குற்றமென எனைவெறுப்பார் உலகில் இல்லை
[அப்பொழுது மடிமை வருகிறது]

26

நன்மாறன் :— [சோர்வுடன் கொட்டாவி விட்டுக்கொண்டே]
அசைந்துவரும் நீ யார் ?
மடிமை :— யான் மடிமை தம்பி
நன்மாறன் :— ஐயோ நீ அப்பால் போ
மடிமை :— [சிரித்துவிட்டு] அறிவில் லாதோய் !
இசைந்தெனை நீ ஏற்கவில்லை யானால் உன்றன்
இரும்பொத்த உடல்நலியும் ஏரும் குன்றும்
நன்மாறன் :— [சோம்பலோடு]
வசையுடையாய் உன்னால்என் வாழ்வுமாயும்
[வீரமாய்] வரவேண்டாம் என் உளத்தில் வாழவேண்டாம்
[அப்பொழுது தாளாண்மை வருகிறது]
நசையுடனே விரைந்துவரும் நண்பா நீயார் ?
தாளாண்மை :— [இறுமாப்போடு]
நலிவில்லாத் தாளாண்மை என்பார் என்னை

27

நல்லபொருள் கல்வியோடு புகழும் சேர்ப்பேன்
நலிவுதரும் பிணியகற்றி வாழச் செய்வேன்
அல்லதொரு கெடுவழியில் என்னை விட்டால்
அனைவரையும் தீங்கடையச் செய்வேன்
[நட்பு வருகிறது]
நன்மாறன் :— ஓஹோ ! மெல்லவரும் இவர் யாரோ ?
நட்பு :— மேலோய் கேள் நீ.
மேதினியோர் நேயமென எனைச்சொல்வார்கள்
சொல்லரிய உலகநடை என்னையின்றித்
துலங்குவது முடியாது துணையே பேராம்
[இருவரும் மறைகிறார்கள்]

28

நன்மாறன் :— [தனியே]
தள்ளரிய குணங்கள்பல தருவா ரின்றத்
தகவுடனே என்னுளத்தில் இருக்க நல்லோர்

எள்ளுகிற தீக்குணமும் என் மனத்தில்
இசைந்துகுடி இருப்பதனை இன்றுகண்டேன்
கள்ளமிகு தீக்குணத்தைக் களைய நின்றால்
கச்சைகட்டி எனை எதிர்த்து நிற்கும் போலும்
[அப்பொழுது சோதி உருவாய் அவன்முன் ஞானம் பேசுகிறது

ஞானம் :—

உள்ளமதில் இவ்வளவு பகையும் நண்பும்
உறைந்திருக்க ஊர்தேடி அலைதல் ஏனோ ?

29

மன உலகக் காட்சிதனை மக்கள் எல்லாம்
மயங்காமல் அறிந்துவிடின் உலகில் உற்ற
இனவகையால் எழும்போரும், ஏழை செல்வர்
ஈடுசெய்ய வரும்போரும், எல்லாப்போரும்
கனவுகண்டு காலையிலே எழுந்தவன் போல்
கருத்திலின்றி செயலளவில் கமழாதன்றோ ?

நன்மாறன் :—

தினகரன்போல் இவ்விடத்து வந்து தூய
செம்பொருளை உணர்த்திநின்ற நீயார் ஐயா ?

30

ஞானம் :—

ஞானமெனச் சொல்வார்கள் நல்லாய் இன்றுன்
நல்லறிவில் சிறிதுநின்றேன் வருகின்றேன்யான்

நன்மாறன் :— [பதைபதைத்து]

தேனமைந்த சீருடையோய் என்னை விட்டுச்
சென்றால்யான் உயிர்வாழேன் தேவா ! தேவா !
[சோர்ந்து கட்டிலில் இருந்து விழுந்துகொண்டே]
மோனஉல கெங்கணுமே ஞானச் செல்வம்
முதிரவில்லை ஆமாம்யான் அறியவில்லை
[கட்டிலிலிருந்து கீழே விழுகிறான். தூக்கம் கலைகிறது கனவும் கலைகிறது. படுக்கையறையில் இருள், மயங்கிய உள்ளத்தோடு]
ஏனிது ? யான் எங்குள்ளேன் கனவா எல்லாம்
இருட்டறையின் எழுத்தினைப்போல் மறைந்து போச்சே.
[விளக்கை ஏற்றிவிட்டுச் சிந்தனையோடு படுக்கிறான்]

முற்றிற்று.

209453